# ஆக்கம்

## காலாண்டு இதழ்

உள்ளே........

- ❋ இந்தியத் தத்துவம் மேலை நாட்டுத் தத்துவம் வரலாற்று ரீதியான ஓர் ஒப்பு நோக்கு.
- ❋ சமஷ்டி அரசாங்க முறையும் அது எதிர்நோக்கும் நெருக் கடிகளும்.
- ❋ ஐரோப்பிய மானிய சமுதாய பண்புகளும் சந்தைப் பொரு ளாதாரத்தின் தோற்றத்திற்கு வழிகோலிய காரணிகளும்.
- ❋ அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நகராக்கம்.
- ❋ ஐ. நா. சபையும் அதன் சமாதானப் பணிகளும்.
- ❋ கானல்வரி ஒரு திருப்பு மையம்
- ❋ நுகர்வோர் சந்தையும், கைத்தொழிலாளர் சந்தையும்.
- ❋ இந்து நாகரிகத்திற் குப்தர் காலம்

வெளியீடு:

J/THE COLLEGE OF DEGREE STUDIES

பட்டப் படிப்புகள் கல்லூரி
148 / 1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஆக்கம்

மலர் : 1 இதழ் : 1

ஆசிரியர் : **திரு. வே. யுகபாலசிங்கம்,** B. A. (Hons) Dip-in-ed. M. A.

நிர்வாக இயக்குநர் : **திரு. இரா. சத்திஸ்வரன்**

**ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் :**

திரு. பொ. அருந்தவநாதன், B. A. (Hons)
திரு. க. செல்வரத்தினம், B. A. (Hons)
திரு. வி. அருளானந்தம், B. A (Hons)
திரு. பொ. அமிர்தலிங்கம், B. A.
திரு. பொன். பூலோகசிங்கம், B. Dev. S. (Hons) Cey., LL. B. (Sri Lanka)
திரு. வே. சிவயோகலிங்கம், B. A. (Hons)
கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

ஆக்கம் சம்பந்தமான உங்கள் கருத்துக்களை அனுப்ப வேண்டிய முகவரி,

ஆசிரியர்,
ஆக்கம்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148 / 1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**சந்தா விபரம்**

ஆண்டுச் சந்தா — 250/-

காலாண்டு — 65/-

# எண்ணம்

மீண்டும் ஆக்கம் உங்கள் கரங்களில். எமது நிறுவனத்தின் ஆக்கபூர்வ மானபணிகளுக்கு ஆக்கம் ஒரு சான்று. பல்கலைக்கழகவெளிவாரி, உள் வாரி, மாணவர்கள், பல்கலைக்கழகப் புகுமுகவகுப்பு மாணவர்களுக் காகவே இம் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. 1989இல் இருந்து, மாதாந்த மலராக மலர்ந்த ஆக்கம் சில ஆண்டுகள் இடைவிட்டு மீண்டும் மலர் கின்றது.

பல்கலைக்கழக கலை வர்த்தக, விஞ்ஞான மாணவர்களுக்குரிய கற்கை நெறிகள் சார்ந்த கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் இம்மலரின் இதழ்களாகும். இவை அவ்வத்துறைபோந்த பேராசிரியார்கள், விரிவு ரையாளர்களினால் படைக்கப்பட்டவை. அதனால் ஆக்கத்தின் தேவை ஈழத்தமிழ் உலகமெங்கும் உணரப்பட்டுள்ளது.

மலர் மலராத இடைக்காலத்தில், மனநிறைவோடு ஆக்கத்தைத் தொடருங்கள் என மடல்வரைந்தவர்கள் பலர் ஆக்கம் மலராதோ என ஆவலோடு வினாவிய மாணவர்கள் பலர். அறிவியற்துறை சார்ந்த ஆக்கங்களை ஆக்கி அளிக்க வேண்டும் என அறிவுரை பகன்ற அறிஞர்கள் பலர். இவர்களின் ஆர்வமே ஆக்கத்திற்கு உரம்.

இன்றைய போராட்ட காலச் சூழ்நிலையில் படைக்கப்படுபவை அனைத்தும் சமூகத்தின் ஆரோக்கியத்திற்கு உதவ வேண்டும். புது உலகம் காணப் புறப்பட்டவர்களின் உயரிய நோக்கம்மிது. இவ் எதிர்பார்ப்புக் கேற்ப இன்று தமிழ் ஈழத்தில் அறிவியல், அழகியல் சார்ந்த மலர்கள் பல பூர்த்துக்குலுங்குகின்றன. ஆக்கமும் அதில் ஒன்றே. இதன் மணம் தனித்துவமானது.

இம் மலர் காலாண்டு இதழாகவே தற்பொழுது வெளிவருகின்றது இது மீண்டும் மாத இதழாக வருவதற்கு நீங்கள் காட்டும் ஆர்வமே உந்துசக்தியாய் அமையும் என்பதை கூறிவைக்க விரும்புகிறோம்.

**ஆசிரியர்**

# இந்தியத் தத்துவம் – மேலைநாட்டுத் தத்துவம்
# வரலாற்று ரீதியான ஓர் ஒப்பு நோக்கு

திரு. வே. யுகபாலசிங்கம் அவர்கள், B. A. (Hons), (Dip-in-Ed)

தத்துவம் என்பது மெய்யைத் தேடும் அறிவியலாகும். மெய்யியல் என அழைக்கப் படுவதற்கு இதுவே காரணம். பிளேட்டோ என்ற கிரேக்க தத்துவ ஞானி, தத்துவத்தை 'மெய்ஞானம்' என்றார். உண்மையை உண்மை வழிநின்று தேடும் முயற்சி என்பது பேராசிரியர் இராதாகிருஷ்ணனின் கருத்தாகும். இத்தேட்டம் எல்லா நாகரிகங்களிலும் காணப்படுகின்றது. தத்துவ விசாரணை மனிதனுக்கு இயற்கையானது· இன்றியமையாதது. அதனாற்தான் மனிதன் ஒரு தத்துவப் பிராணி என்பர். தன்னை, தன்னைச் சூழ உள்ள உலகு பற்றி எப்போதும் ஆராய்ந்து கொண்டே இருப்பான். அவனது வாழ்க்கை முழுவதுமே தத்துவத்தின் ஆராச்சிப் பொருளாகின்றன. அறிவுக்கும் வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமையும் பல்வேறு பிரச்சினைகளில் தத்துவம் கவனம் செலுத்தி அவற்றின் உண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. இவ்வடிப்படையில் இருபாரம்பரியங்களின் இயல்பில் ஒற்றுமை உளது. ஆனால் இவற்றை இனங்கண்டு உணர்த்த முற்பட்ட காலம், உணர்த்தும் பாங்கு, முக்கியத்துவம் கொடுத்த விடயம், பேன்றவற்றில் வேறுபாடுகள் உள்ளன. இவ்வுண்மையை உலகின் தலைசிறந்த தத்துவஞானிகள் எடுத்துக் காட்டியுள்ளனர். எமது பேராசிரியர் இராதகிருஷ்ணனின் கருத்துப்படி, "கி. மு. 6000ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கொள்வது மிகைப்படுத்தப்பட்ட ஊகமாக அமைந்தாலும், கி. மு. 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கொள்வது பொருத்தமானதே. வேதகாலம் பௌத்த மதத்திற்கு முற்பட்டது என்பதில் ஐயமில்லை" என்றார். மேலைத் தேயத்தத்துவம் கி. மு. 7ம் நூற்றாண்டோடுதான் ஆரம்பமாகின்றது. அதற்கு முற்பட்ட காலச்சிந்தனைகள் தத்துவத்துக்குரியதாக அமையவில்லை. இக்கருத்துக்கள் மதிப்புக்குரிய ஞானிகளால் சினேகபூர்வமாகப் பரிமாறப்பட்டுள்ளன. பெருமைக்குரிய ராஜயோகிசுவாமி விவேகானந்தர் மேலைநாட்டுத் தத்துவ ஞானிகளுடன் தொடர்பு கொண்ட எழுத்துக்கள் இதற்கு சான்று பகர்கின்றன. காண்ட் (Kant) என்ற மேலைநாட்டுத் தத்துவ ஞானியின் கருத்துக்கள் பல, அவருக்கு முன்பே இந்தியத் தத்துவஞானத்தில் இடம் பெற்றிருப்பதை மார்க்ஸ் முள்ளர் (Marx-Mull s) என்ற மேலைத்தேய தத்துவ ஞானிக்கு எடுத்துக் காட்டினார். இவ்வுண்மைகளை, தியோஸ்-பேர்னாட் (Theos Be-rnaro), ஹேர்பபர்ட் செண்டர் (Herbert W. Sehneider) லூயி கிரேயி (Louis H.-Grey), தேஸ்குப்தா (S Dasgupta) மகாதேவன் (Dr. T M. P. Mahadevan) கிரியண்ணா (M. Hriyanna), தேவி சடோபாத்தையா (Devi Prasad Chattopadhyaya) பேர்னாட் (John Beqnd) வென் (A.W. Been) ஸ்ரெயிஸ் (W. T. Stace) ரசல் (Berand-Russell) போன்றோரின் ஆய்வுகளில் அவதானிக்கலாம்.

மேலைத்தேயத் தத்துவம், புறஉலக அனுபவங்களினூடாகவே அகவுலக அனுபவங்களைத் தரிசித்தன. அதன் கிரகப் பிரவேசம் இவ்வாறுதான் ஆரம்பிக்கின்றது. இந்திய தத்துவ ஞானம் அகவுலக அனுபவங்களினூடாகவே புறஉலக அனுபவங்களுக்குச் செல்கின்றது. தன் இருப்பினூடாகவே உலக இருப்பின் உண்மையைத் தேடினான். வியப்புக்குரிய இச்சாதனை இந்தியத்தத்துவத்திற்கே உரிய பண்பாகும். அறிவாராச்சியலின்படி அனுபவ முதலான சிந்தனைகள் என வருக்கப்பட்ட எண்ணக் கருக்கள், இந்தியத் தத்துவ ஞானத்தின் சாரமாக, ஆய்வுக்குரிய முதற் பொருளாகக் கொள்ளப்பட்டன. மேலைதேயத் தத்துவம், அக்காலப் புராண இதிகாசக் கால மரபுகளை விமர்ச்சிப்பதாகவும் அதற்கு எதிரான கருத்துக்களை ஆதாரங்களோடு நிறுவும் முயற்சிகளுமாகவே ஆரம்பித்தது. பல தெய்வ வணக்கங்கள்

சடங்குகள், கிரியைகள், வேள்விகள், இயற்கை அம்சங்களை தேவர்களாகத் தேவதைகளாகப் போற்றுதல், அரசனையும் அவனைச் சார்ந்தோரையும் கடவுளாகக் கொண்டு ஓம்புதல், போன்ற நடத்தைகளின் ஏற்புடைமையை ஆராய்வதாக இவற்றுக்கெல்லாம் ஆதாரமான அடிப்படையான மூலப் பொருள், முதற் பொருள் எது வென ஆராய்ந்து நிறுவுவதாக ஆதிகிரேக்க கால மெய்யியல் அமைவதை அவதானிக்கலாம். இப்பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணம் ஒரு மூலப்பொருள் அது இவ் இயற்கைக்கு உட்பட்ட ஒரு சடப் பொருளே என நிறுவ முயன்ற முயற்சியாகவே தத்துவத்தின் ஆரம்பகால இயல்பு அமைந்தது. பூமி, அதனைச் சூழ உள்ள கோள்கள் உடுக்கள் பற்றிய விசாரணைகளுக்கூடாகவே இப்புவியில் வாழும் உயிர்களின் தோற்றம் பற்றிய ஆய்வுக்கு வந்தான். இடப்பெயர்வு, அசைவு, இயக்கத் தொடர்பான ஆய்வுகளினூடாகவே, இரவு - பகல் சூடு-குளிர், விழித்தல்-துயிலுதல், பிறப்பு-மரணம், பற்றிச் சிந்தித்தான். கி. மு. 7ம் நூற்றாண்டிலிருந்து 5ம் நூற்றாண்டு வரை பௌதீக உலகு தொடர்பான விசாரணையே அதிக முக்கியத்துவம் பெற்ற தத்துவச் சிந்தனையாக அமைந்திருந்தது. மைலீசிய மரபினர் பைதக்கரசு, பார்மினாடிசு, அனக்சக்கரசு, கிரேக்கரிட்டசு அணுவாதிக போன்றோரின் பௌதீகக்கருத்துக்கள் பௌதீகக் கண்டு பிடிப்புக்கள், கேத்திர கணித முன்வைப்புக்கள் போன்றன முக்கியத்துவம் பெற்ற அளவுக்கு, அவர்களின் ஆன்மீகக் கருத்துக்கள் உலகாத்மா தொடர்பான கருத்துக்கள் விருத்தியடையவில்லை உதாரணமாக பைதக்கரசுவின் மதம், மறு பிறப்புக் கொள்கை. வாழ்வுச் சக்கரம் பற்றிய சிந்தனைகள் முக்கியத்துவம் பெறாததை அவதானிக்கலாம். ஆதி கிரேக்க காலந் தொட்டு சமகாலம் வரை மேலைத் தேயத்தத்துவத்தில் ஆன்மீகவாதம், கருத்து முதல்வாதமாகக் கொண்டு விமர்ச்சிக்கப்பட்டு வருகிறது.

இந்தியத் தத்துவம் அகவுலக அனுபவங்களினூடாகவே புறஉலக விசாரணைக்குச் செல்கின்றது. ஆன்மா, ஆன்மாவின் இயல்பு, வேறுபாடு என்ற ஆய்வோடு ஆரம்பமாகின்றது. ஆன்மாக்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் பிறப்பினால் உறும் துன்பங்கள், தொடரும் வினைகள் அதன் ஆய்வுக்குரிய முதற் பொருளாகின்றது. இதனூடாகவே இவ்வுலகின் இருப்புப் பற்றி அதன் உண்மைபற்றி அவசியம் பற்றி ஆராய விளைகிறது. இந்தியத்தத்துவம் வேதங்களோடு தொடர்புபடுவதற்கு இதுவே காரணம். வேதங்களோடு தொடர்புபட்டது என்று கூறுவதிலும் பார்க்க 'வேதமே இந்தியத் தத்துவம்' என்று கூறுவதே பொருத்தமானது. வேதம் என் பதன் பொருளும் அதுவே. அறிதல்; மெய்யை மெய்யாக உணர்தல், ராதாகிருஷ்ணன் பல இடங்களில், இதனை வலியுறுத்தியுள்ளார். அவரின் ஆன்மானாம் வித்தி (Atmanam Viddhis) என்ற விளக்கம் இதையே உணர்த்துகின்றது. வேதங்கள் ஆன்மா - கடவுள் - உலகு தொடர்பான முக்கோணத் தத்துவத்தை உணர்த்துகின்றன. இவற்றின் சாரத்தை, உட்பொருளை உணர்த்துகின்றன. இதை அறிவதே மெய்யறிவு எனக் கொள்கின்றன. இவ்வகையில் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நால் வகை வேதங்களும் வேதத்தின் அங்கங்களாகிய, மந்திரம் பிராமணம், ஆரணியம், உபநிடதம், போன்றனவும் வைதீக தரிசனங்கள் அவை தீர்க்க தரிசனங்களும் இந்தியத் தத்துவத்திற்குரியவையாகும்.

இரண்டுதத்துவப்பாரம்பரியங்களிலும் அறிவும், அறிவு தொடர்பான பிரச்சினைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால், அறிவினைப் பெறும் வாயில்கள் தொடர்பான கருத்தில் கலாச்சார வேறுபாட்டினை அவதானிக்கலாம். காட்சி, அனுமானம், உய்த்தறி, தொகுத்தறி இயக்கவியல் போன்றனவே மேலைத்தேயத் தத்துவம் ஏற்றும் கொள்ளும் வாயில்கள். இந்தியத்தத்துவம் காட்சி அனுமானம் ஆப்தவாக்கியம், உவமானம் அருத்தாபத்தி, அபாவம், பரிசேடகம், சம்பவம், ஐதிகம், சுபாவம் போன்றவற்றை ஏற்றுக் கொள்கின்றன. இவற்றில் ஆப்த வாக்கியம், என்ற சப்தம், அல்லது ஆகமப் பிரமாணத்திற்கே அதிக முக்கியத்துவம்

கொடுக்கின்றது. மேலைத் தேய தத்துவத்தில் இது அனுபவ முதலான கூற்றுக்கள், முன்னது ஏதுவான கருத்துக்கள், ஆதாரமற்ற நம்பிக்கைகள், ஊக்கங்கள் என விமர்சிக்கப்பட்டு நிராகரிக்கப்படுகின்றன, ஆனால் இந்தியத் தத்துவத்தில், அதன் அறிவாராச்சியல் நோக்கில் இவ்வாயிலே அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. பகுத்தறிவுக்குப் பொருந்தாத சான்றுரை என நிராகரிக்கப்படும் ஒருவாயில், அதற்குமுன் பன்னெடுங்கால வரலாற்றுப் பின்னணியைக்கொண்ட இந்தியத் தத்துவத்தில் முக்கியத்துவம் கொடுத்திருப்பதே இன்றைய நவீன அறிவாரச்சியாளருக்கு உற்சாகத்தைத்தரக்கூடிய ஆய்வுப் பொருளாகும். காட்சி, அனுமானம் போன்ற வாயில்கள் நன்கு பலபடிநிலைகளாகப் பகுத்து விளக்கப்படும் பாங்கு, எமது தத்துவமரபின் ஆழத்தைக் கண்டு மலைப்பதிலும் பார்க்க, இதுவரை காலமும் இனங்காணாதிருந்து விட்டோமே என்றவெட்கத்தை நா அடக்கத்தை தருகின்றது. உய்த்தறி, தொகுத்தறி, இயக்கஇயல்போன்ற அணுகுமுறைகள் மேலைத்தேயத்தத்துவத்திற்கே உரியன என்ற கருத்தை இராதா கிருஷ்ணன், மகாதேவன், கிரியண்ணா, குப்தா போன்றோர் தமது ஆய்வுகளில் நிராகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கிரேக்கால உரையாடல் முறை இயக்க இயல் அணுகு முறையை உபநிடதங்களிலும் அதன் அமைவிலும் இனங்கானலாம் எனப் பல சந்தர்ப்பங்களில் பேராசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

தனிமனித, சமூகக் கலாச்சாரங்ளையும், வாழ்முறைக்கு வேண்டிய ஒழுக்க நெறிகளையும், வரன்முறையான கல்வியையும், நீதி நெறிகளையும், பற்றி மேலைத் தேயத் தத்துவத்தின் ஈடுபாடுகள் அண்மைக் காலத்தனவே. சோக்கிரட்டீஸ் (Sokrates) பிளேட்டோ (Plato) அரிஸ்டோட்டில் (Aristotle) போன்றவர்களுடைய மெய்யிற் சிந்தனைகளிற் இவை காணப்பட்டாலும், பிற்காலச் சிந்தனையாளர்களினால் இவை விமர்சிக்கப்பட்டன. நவீன மெய்யியற் காலத்தில் ஏற்பட்ட மெய்யியற் பிரிவுகள், ஒழுக்கப் பிரிவுகள் இச்சிந்தனைகளில் பல கருத்து வேறுபாடுகளை தோற்றுவிப்பனவாக அமைந்தன. இத்தகைய நிலையை நாம் இந்தியத்தத்துவத்திலும் இனங்காணலாம். மேலைத்தேயத் தத்துவத்தில் ஏற்பட்டகருத்து வளர்ச்சி, அறிவியற் பிரிவுகளின் பரிணாமத்தை இந்தியத் தத்துவத்தில் கி. பி· 18ஆம் நூற்றாண்டுக்குப் பின் அவதானிக்க முடியவில்லை. ஆனால் வேதகால இலக்கியங்களை அவதானிக்கும்போது அத் தொன்மைக் காலத்தில் எவ்வளவு ஆரோக்கியமான சிந்தனைகள் இருந்தன என வியக்க வைக்கின்றது. யசூர் வேதத்தில் 18ஆம் அத்தியாயத்தில் 8முதல் 12 வரை உள்ள பாடல்களில் வரும் வாழ்க்கை விபரங்கள் பல உண்மைகளை உணர்த்துகின்றன. 8 ஆம் பாடலில், ''எனதுநாடும் அதன் அடிப்படை பொருள்களும், எனது வசதியும் அதன் வழிகளும், எனது அன்பும் அதற்குரிய இடங்களும், எனது மத விருப்பமும் அதன் காரணமும், எனது மனத் தூய்மையும் அதற்கான அடிப்படைநிலையும், எனது மேன்மையும் அதற்கான வாய்ப்பும், எனது பலமும் அதன் அடிப்படை துணைகளும், எனது சுகந்தரும் சௌதரியமும் அதன் வழிகளும் எனது விடுதலை இன்பமும் அதன் வாய்ப்புக்களும் எனது அருமையான வசிப்பிடமும் அதன் மூலப் பொருள்களும், எனது புகழும் அதன் காரணமான திறமையும் கடவுளின் கருணை மூலமாகலாம்.'' எனக்கூறப்படுகின்றன. இத்தகைய வாழ்க்கைக்கு வேண்டிய விழுமியங்கள் ஆரம்பகாலத் தரிணங்களாக வேதங்களில் முன்வைக்கப்பட்டிருப்பதே இந்தியத் தத்துவத்தின் பெருமையாகும். இதனை நவீன உலகம் விவேகானந்தரின் உருவத்தில், வாக்கில், வாழ்முறையில் கண்டுதரிசித்தது. ஆன்மீக உலகின் வியத்தகு சாதனைகளை நிகழ்த்தியவர்கள் பலர். புத்தர், சங்கரர், இராமனுஜர், மத்துவர், குருநாக், ராமகிருஷ்ண பரம்மகம்சர், ரமணமகரிஷி, அரவிந்தர், தயானந்தர், மகாத்மகாந்தி என, எண்ணிலடங்கா ஞானிகள் இந்தியத் தத்துவத்தை மெருகூட்டியுள்ளனர். மேலைத்தேயத் தத்

துவஞானிகள் கண்டு கேட்டு வியக்குமள வுக்கு கருத்துலகில் இவர்களது சாதனைகள் அமைந்துள்ளன. மேலைத்தேயத்தத்துவவரலாற்றில் 19ஆம் நூற்றாண்டின் பின் ஏற்பட்ட சிந்தனை வளர்ச்சியில் தர்க்கப்புல னெறிவாதம் (Logical Positivism) குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் பேறாய் மொழி மெய்யியல் என்ற பிரிவு அபிவிருத்தியடைந்தது. விகந்னாதன் (Wittgensteren) என்ற தத்துவஞானி அம் மெய்யியலில் முக்கியத்துவம் பெறுகின்றார். இம் மெய்யியற் சிந்தனை, இந்தியமரபிற்குப் புதிதல்ல என்பதே என்ற தாழ்மையான கருத்து, அவர்கூறும் பிரத்தியேக மொழிக் கோட்பாடு, மொழிப் புவியியல் தொடர்பான கருத்துக்கள் தொல்காப்பியத்தில் கூட இடப் பெற்றுள்ளதைப் பலர் அறியார். சாம வேதத்திலும், ஐவகைத் தரிசனத்திலும் கூட இத்தகைய சிந்தனைகள் காணப்படுகின்றன. எமது தத்துவமரபில் இவற்றை இனங்கண்டு தொகுத்து வெளியிடப்படவில்லை. அறிவாராச்சியில் மேலைத்தேய மரபில் அபிவிருத்தியடைந்து வருவது போல் இந்தியத்தத்துவத்தில் அபிவிருத்தியடையாமையே இத்தகைய உண்மைகள் வெளிக்கொணரப்படாததற்குக் காரணம்.

சமகாலத்தில், இருப்புவாதம் (Existentialism) என்ற மெய்யியற் போக்கு மேலைத்தேய மெய்யியலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அழகியல், அரசியல், ஒழுக்கவியல், மதம், அறிவியல் போன்ற துறைகளில் அதன்பாதிப்பை அவதானிக்கலாம். அவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டுவதும் ஒரு மெய்யியற் போக்காக உளது. பாதிப்பு எதுவும் இல்லாவிட்டாலும், பாதிக்கப்பட்டிருப்பதாக வலிந்து ஆராய்ந்து நிறுவ எத்தனிப்பதும் அதைப் பார்த்து வியப்பதுங்கூட மேதாவிலாசமாக கொள்ளப்படும் பாங்கு அங்கு மலிந்துளது. இத்தன்மைகள் போக்குகள் எமது மரபில் கி. பி. 17ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்பதே என் கருத்து. இருப்பு வாதச் சிந்தனைகள் மட்டுமல்ல, அமைப்பு வாதம் (Structuralism) நோக்கு வாதம் (Purposivism) செல்வாக்கு வாதம் (Populism) போன்றன இந்திய தத்துவ மரபில் இருந்து, இனங்காணப்படாததால் இல்லாமற் போயிற்று என்பதே சமகால இந்தியத் தத்துவ ஞானிகளது கருத்தாகும். சமூக, அரசியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றம், அந்நிய மொழி ஆதிக்கம் அறிவியல் விருத்தியின் தாக்கம், விஞ்ஞானத்துறைகளின் அபிவிருத்தி முறையியலின் வளர்ச்சி போன்றன இந்திய வரலாற்றமைவில் ஏற்படுத்திய தாக்கமே இவற்றுக்குக் காரணம். 19ம் நூற்றாண்டின் பிற்காலப்பகுதியிலேயே இவ்வுண்மைகள் இந்தியத்தத்துவ ஞானிகளால் அறியப்பட்டன. இந்தியத் தத்துவத்தின் ஆழ அகலத்தைக் கண்டு வியந்ததே ஆங்கில மொழியிற்தான். ஆங்கில மொழியில் அமைந்த ஏடுகளை புரட்ட கிடைத்த வாய்ப்புக்களே, எமது தத்துவப் பாரம்பரியத்தை-தொன்மையை, அறிந்திருந்து, பின் அறியப்பாடாதுபோன வரலாற்றை அவதானிக்க உதவியது.

பேராசிரியர் இராதகிருஷ்ணன் அவர்களின் மெய்யியல் பிரவேசத்தைத் தொடர்ந்து இந்தியத் தத்துவ ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் அண்மைக் காலத்தில் மேலைத் தேயத் தத்துவப் பரப்புப் போல் இந்தியத் தத்துவத்தின் பரப்பும் நோக்கெல்லையும் விரிவடைகிறது. இடையில் மறைக்கப்பட்டு விட்ட, மறந்து போன உண்மைகளை வெளிக் கொணர்வதோடு காலதேசவர்த்தக மாறங்களுக்கேற்ப, புதிய அறிவியற் பரிணாமங்களுக்கு முகம் கொடுத்து வளர்ச்சியடைகிறது. சில அணுகுமுறைகளில், மேலைத்தேயத் தத்துவம் நுழையாத அறிவியற் பிரச்சினைகளைத் தெளிவு படுத்தவும் முயல்கிறது. இந்தியத்தத்துவம் என்பது, வேதங்களை, வேத அங்கங்களை, வைதீக, அவைதீக தரிசனங்களை ஆராய்வதும் ஒப்பிடுவதுமே என்ற மனப்பாங்கிருந்து விளங்குவது அவசியம். ஆழ்கடலில் முத்துக் குளிப்பதைப் போல், இந்தியத் தத்துவத்தில் அது இருந்தது. இது இருந்தது என்று காட்டுவதன் மூலம், தத்துவ ஞானிகளாவது, அதனை சரியாக இனங்காணாது பாமரத்தனமாக அத்தகையவர்களை ஓகோ எனப் புகழ்வது, களம் அமைத்துக் கொடுத்து காதாரக் கேட்பது போல் நடிப்பதும் எம்மை விட்டு மெய்யாக விலகும்போது இந்திய மெய்யியல் ஆரோக்கியமாகிவிடும். மேலைத்தேயத் தத்துவத்தின் துரித வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் இதுவுமொரு காரணமாகும்.

# சமஷ்டி அரசாங்க முறையும் அது எதிர்நோக்கும் நெருக்கடிகளும்

திரு. க. செல்வரத்தினம் B. A. (Hons) அவர்கள்
(விரிவுரையாளர் பட்டப்படிப்புகள் கல்லூரி)

சமஷ்டி முறை என்பது அதிகாரங்கள் பன்முறைப்படுத்தப்பட்ட ஒரு அரசாங்க முறையாகும். மத்திய அரசின் கீழ் அதன் தலைமையின் கீழ் பல சிறிய மாநிலங்களோ அல்லது அரசுகளோ தமது சுதந்திரத்தையும், தனித்துவத்தையும் இழக்காது பொது நன்மையை நோக்கமாகக் கொண்டு அதிகாரப் பன்முகவாக்கல்மூலம் இயங்கும் ஒருவகை ஆட்சி முறையாகும். இவ்வாட்சியில் மத்திய, மாநில அரசுகள் தமக்கென வரையறுக்கப்பட்டிருக்கும் நிர்வாகப் பரப்புக்குள் ஆதிக்கமுடையனவாக விளங்குகின்றன.

சமஷ்டி அரசாங்க முறையானது அண்மைக் காலத்தில் முக்கியம் பெற்று விளங்கும் ஒரு அரசாங்க முறையாக விளங்குகின்றது. எனினும் புராதன கிரேக்க காலத்திலே இத்தகையதொரு அரசாங்க முறையைக் காணக் காணக்கூடியதாக இருந்தது. இருப்பினும் இந்த முறையானது முழு அளவான அல்லது பூரணமான சமஷ்டி முறையாகவோ காணப்படவில்லை. மிக ஆரம்ப காலத்திலிருந்துதான் இவ்வாட்சிமுறை வளர்ச்சியடைந்து வந்தது. குறிப்பாக 1787ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி அரசியல் அமைப்பு அறிமுகம் செய்யப்பட்டபின்பு புதியதோர் வடிவத்தைப் பெற்றது. பூரண சமஷ்டி முறையினை அறிமுகம் செய்த நாடாக ஐக்கிய அமெரிக்கா காணப்படுகிறது.

இன்று உலகில் மக்கள் வாழும் நிலப் பரப்பில் ½ பங்குக்கு மேற்பட்ட நாடுகள் சமஷ்டி முறையைப் பின்பற்றுகின்றன. ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சிலாந்து, கனடா, ஜேர்மனி, பிரேசில், மெச்சிக்கோ, ஆர்கன்டீனா, இந்தியா, மலேசியா, வெனிசுவெலா, அவுஸ்திலேலியா ஆகிய நாடுகளும், மற்றும் ஆபிரிக்க நாடுகளும் சமஷ்டிமுறையைப் பின்பற்றுகின்றன. சமஷ்டி முறைக்கு இந்த நாடுகளைக் குறிப்பிடினும் இந்த நாடுகள் யாவும் உண்மையான சமஷ்டி முறையைப் பின்பற்றுகின்றனவா? என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

இன்று பெரும்பாலான நாடுகளைச் சமஷ்டி நாடுகள் என்று கூறுவதைவிட சமஷ்டியின் சாயல்களைக்கொண்ட நாடுகளே கூடுதலாக உள்ளன. ஒரு நாட்டின் அரசியல் அமைப்பினைக்கொண்டு அந்த நாடு சமஷ்டி நாடு என்று கூறுவதைவிட சமஷ்டி அரசாங்கத்தின் நடைமுறைகள் கூட்டாட்சித்தன்மையைக் கொண்டிருக்கின்றனவா? என்பதை நோக்குதல் வேண்டும். மத்திய, மாநில அரசுகள் சமஉரிமை கொண்ட அரசுகளாக ஒன்றுக்கொன்று அடங்கி நடக்கும் நிலை சமஷ்டி அல்ல. இரு அரசுகளும் சுதந்திரமான முறையில் தமது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் ஆட்சிசெலுத்தும் முறையே சமஷ்டி ஆகும். தேசிய ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் அதிகாரங்களைப் பங்கீடுசெய்து சமமான முறையில் தொடர்புகளை ஏற்படுத்திச் சுதந்திரமாகத் தமது எல்லைக்குள் செயல்படும் ஆட்சி சமஷ்டிஎன (K. C. Where) கே. சி. வெயர் குறிப்பிட்டுள்ளார்.

இவ் ஆட்சி முறையானது மிகப் பெரிய நிலப்பரப்புக்களைக் கொண்ட நாடுகளுக்கும் இன, மத, கலாச்சார மற்றும் பொருளாதார வேறுபாடுகளைப் பிரதிபலிக்கும் மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளுக்கும் பொருத்தமானதாகும். வேறுபட்ட பிரதேசங்கள் ஒன்றிணைவதன்மூலமும்,

ஒற்றையாட்சி அரசொன்று பிரிந்து இயங்குவதன் மூலமும் இவ்வாட்சி உருவாக்கப்படலாம். இவ்வாட்சி சிறப்பான ஒரு ஆட்சி எனக் கூறமுடிந்த பொழுதிலும் பூரண சமஷ்டியை நாம் காண்பது அரிது. ஒற்றையாட்சிப் பண்புகளைக் கொண்ட அரை சமஷ்டி நாடுகளையும் நாம் காண்கிறோம். மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் மேலோங்கிச் செல்வதையும் நாம் காண்கிறோம். மாநில அரசுகள் மீது மத்திய அரசின் கட்டுப்பாடு மேலோங்கி இருப்பதை இந்திய சமஷ்டியில் காண முடிகின்றது. 1909இல் உருவாக்கப்பட்ட தென்னாபிரிக்கக் குடியரசும் மாநில அரசுகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவில்லை. இந்திய அரசியல் அமைப்பில் 352வது விதி அவசரகால நிலைமைகளில் மத்திய அரசு மாநில அரசுளைக் கலைக்க முடியும். இதனாற்தான் இந்திய வலுவான மைய அதிகாரக் குவிப்பைக் கொண்ட கூட்டாட்சி என ஐவர் நெனிங்ஸ் குறிப்பிட்டார். இதனைவிட மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கி மத்திய அரசு மாநில அரசுகளின் கீழ் இயங்குவதும் சமஷ்டி எனக் கூறலாம். எவ்வாறாயினும் மத்திய மாநில அரசுகள் அதிகாரங்களைத் தமக்குள் பகிர்ந்துகொள்வதன் மூலம் ஒன்றை ஒன்று கட்டுப்படுத்தாமல் அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் சுதந்திரமாக இயங்குவதையே உண்மையான சமஷ்டி எனக் கூறலாம். இந்தவகையில் ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம்.

சமஷ்டிமுறையின் உருவாக்கத்திற்கும் அதன் சிறப்பான இயக்கத்திற்கும் அவசியமான சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுவது சமஷ்டியில் சேருகின்ற விருப்பம் சிறிய அரசுகளுக்கு ஏற்பட வேண்டும் விருப்பம் பல்வேறு தேவைகளின் அடிப்படையில் ஏற்படுகின்றது. பாதுகாப்பு, பொருளாதார நோக்கம் அரசியல் ரீதியாக நெருக்கமான உறவுகளினாலும், அரசியல் நிறுவனங்களின் ஒத்த தன்மைகள் ஆகியனவாகும். இன, மத, மொழி ரீதியாக ஒன்றுபட்ட மக்கள் வாழும்பொழுது சமஷ்டியை உருவாக்கமுடியும். உ+ம். ஐக்கிய அமெரிக்க சமஷ்டி, அவுஸ்திரேலிய சமஷ்டி பாதுகாப்பு நோக்கம் கருதித் தோற்றம் பெற்றன.

புவியியல் ரீதியாக நெருங்கிக் காணப்படுவது சமஷ்டிக்குச் சாதகமாகவும் அவசியமானதுமாகும். சமஷ்டியில் இணைகின்ற அரசுகள் நீண்ட புவியியல் எல்லைகளால் பிரிக்கப்பட்டிருந்தால் சமஷ்டி உருவாகாது. நீண்ட புவியியல் தன்மையால் பிரிக்கப்பட்டிருந்தால் சமஷ்டியின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும். மத்திய மாநில உறவு விரிசலடைவதுடன் பாதுகாப்பு, பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வழிகிடையாது போகலாம். பாகிஸ்தான் சமஷ்டி தோல்வி அடைந்தமைக்கு இதுவே காரணம் எனலாம். வேறுபட்ட மொழி, கலாச்சாரங்களைக் கொண்ட மக்களைக் கொண்ட சிறிய அரசுகள் சமஷ்டியில் இணையலாம். ஆனால் அந்த அரசுகளின் இன, மத, மொழி பிரதேச கலாச்சார நலன்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும். பலமான சிறிய அரசுகள் பலவீனமான சிறிய அரசுகளை ஆட்சேபிக்கவோ அபகரிக்கவோகூடாது. இணைகின்ற அரசுகள் இணைப்பை விரும்புவதைத் தவிர சங்கமத்தை விரும்பக்கூடாது. சிறந்த சமஷ்டிக்கு உ+ம் சுவிஸ்சிலாந்தைக் குறிப்பிடலாம். இந்த நாடு நிலப்பரப்பில் இலங்கையைவிட மிகவும் சிறியது. ஏறத்தாழ 42500 ச. K. M. பரப்பைக் கொண்டது. மொத்த சனத்தொகை 7·5 Mill ஆகும். பல இனம், பல மொழிகளைப் பேசும் மக்கள் இந்த நாட்டில் வாழ்கின்றனர் ஆயினும் அந்த நாட்டில் சம அந்தஸ்துடைய மாநிலங்களைக் காண முடிகின்றது.

கூட்டாட்சியில் இணைகின்ற மாநிலங்கள் அல்லது சிறிய அரசுகளுக்கிடையே சமத்துவமான நிலை காணப்படவேண்டும். நிலப்பரப்பு, சனத்தொகை அடிப்படையில் அதிகாரங்கள் நிர்ணயிக்கப்படக்

கூடாது. ஐக்கிய அமெரிக்காவில் மாநிலங்களுக்கிடையில் சமத்துவத்தைக் காண முடிகிறது. ஆனால் இந்தியாவில் அத்தகைய சமத்துவம் பேணப்படவில்லை. பொருளாதார ரீதியான மாநிலங்கள் வேறுபட்டுக் காணப்பட்டாலும் சமஷ்டிமுறை வீழ்ச்சியடையவும் வழிவகுக்கும். இந்தியாவின் சமஷ்டியில் இதனைக் காணமுடிகிறது.

சிறப்பான சமஷ்டிக்கும் அதன் ஸ்திரமான நிலைப்பட்டிற்கும் சமூக பொருளாதார அபிவிருத்தி இன்றியமையாததாகும். கல்வி அறிவுடைய மக்கள் பிற்போக்கான சிந்தனைகளில் இருந்து விடுபட்டவர்களாகக் காணப்படுவர். சட்டத்துக்கு அடிபணியும் அரசியல் அறிவும் நவீன அரசியல் கலாச்சாரத்தையும் உடைய மக்கள் சிறந்த சமஷ்டி உருவாகுவதற்கு வழி வகுப்பர். அத்துடன் விருத்தியடைந்த பொருளாதார முறைமை காணப்பட வேண்டும். ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிற்சிலாந்து போன்ற நாடுகளில் வளர்ச்சியடைந்த பொருளாதார நிலை சிறப்பான சமஷ்டிக்கும், சோவியத் சமஷ்டியின் வீழ்ச்சிக்கு வளர்ச்சியடையாத பொருளாதார நிலையும் ஒரு காரணமாக அமைந்துள்ளதை சோவியத்தின் வீழ்ச்சிமூலம் அறிய முடிகின்றது.

சமஷ்டி சிறப்பான இயக்கத்திற்கு இந்த தலைமைத்துவப் பண்பு அவசியம். இதை மொழி ரீதியாக வேறுபட்ட மக்களை இணைப்பதற்கு தலைமத்துவம் அவசியமாகும். ஆளுமைமிக்க தலைமைத்துவம் கூட்டாட்சியின் நிலைப்பாட்டிற்கு அவசியம். உதாரணமாக யூகசிலவாக்கியாவின் சிறப்பான சமஷ்டிக்கும் மாஷல்டிற்றோவின் தலைமைத்துவத்தைக் குறிப்பிடலாம் இன்று அவரின் மறைவு யுக்கோசிலாவாக்கியாவின் உடைவிற்கு வழிவகுத்தது. சோவியத் வீழ்ச்சிக்கு கோபர்ச்சோவின் தவறான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளே காரணமாக அமைந்தது. அத்துடன் தேசிய மட்டத்திலான வளர்ச்சி அடைந்த கட்சிகளும், தேசிய ஒருமைப்பாடுடைய மக்களும் அதாவது வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் மக்களும் அவசியம் அத்துடன் மத்திய மாநில அரசுகளுக்கிடையில் உறவுகள் சுதந்திரமாகக் காணப்பட வேண்டும். நடைமுறையில் சமஷ்டி நாடுகளில் மத்திய அரசின் அதிகாரங்கள் மேலோங்கிச் செல்வதையும் இது சிறந்த சமஷ்டி உருவாகவோ அல்லது நிலைத்து நிற்கவோ வழிவகுக்க மாட்டாது இவ்வாறாக பல அம்சங்கள் சமஷ்டியின் போக்குக்கும் அதன் நிலைப்பாட்டுக்கும் காரணமாக அமைகின்றன.

சமஷ்டி அரசாங்க முறையானது சிறப்புமிக்க ஒன்றாகக் காணப்பட்ட போதிலும் அது பல பிரச்சனைகளை இன்று எதிர் நோக்க வேண்டியுள்ளது. சமஷ்டி ஒன்றுக்கு மிகவும் அவசியமானது மைய மாநில அரசுகளுக்கிடையிலான அதிகாரப்பங்கீடு. அதிகாரப் பங்கீடு மூலமே மைய மாநில அரசுகளின் அதிகாரங்களை வகுக்க முடியும். திருப்திகரமான அதிகாரப் பங்கீடு இல்லாவிட்டாலும் அது பல பிரச்சனைகளை எதிர் நோக்கும். பிறைஸ் பிரபு குறிப்பிட்டது போல மத்திய மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரம் சமநிலையாய் இருக்க வேண்டுமென்றார். மத்திய அரசான சூரியனை வலம் வருகின்ற மாநில அரசுகளான கோள்கள் அதன் ஈர்ப்பு வட்டத்திலிருந்து விலகாமலும் அதேவேளை அதன் வெப்பப்பகுதிக்குச் சென்று விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றார். அதாவது அதிகாரப்பங்கீடு அவசியம் என்பது அவரின் கருத்தாகும். ஏனைய பொதுவான நலன்களில் மாநில அரசும் சட்டமியற்ற வேண்டும். இதற்கென அதிகாரப்பட்டியல்,

(i) கூட்டாட்சிப் பட்டியல்
(ii) மாநிலங்களின் பட்டியல்
(iii) பொதுவான அதிகாரங்கள் OR மீதியான அதிகாரங்கள்

என வகுக்கப்பட்டு பொதுவான அதிகாரங்களில் மத்திய அரசைவிட மாநில அரசு சட்டமியற்றுவதில் கூடிய அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றதென்றால் சிறந்த சமஷ்டி உருவாக வழிவகுக்கும். ஆனால் நடைமுறை அரசியலில் மத்திய அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பாவித்து மாநிலங்களைக் கட்

டுப்படுத்துவதைக் காண முடிகின்றது. அதாவது மாநிலங்களின் அதிகாரத்தை வரையறை செய்து, மிகுதியான அதிகாரத்தை மத்திய அரசுக்கு விடுவது மத்திய அரசாங்கத்தைப் பலப்படுத்தும் ஒரு செயல் முறையாகும். அதே நேரம் மாநில அரசை பலவீனப்படுத்தும் செயல் முறையாகும். அதிகாரப் பங்கீடு மத்திய மாநில அரசுகளுக்கிடையில் செய்யப்பட்டால் அது திருப்திகரமான அதிகாரப் பங்கீடு எனக்கூற முடியாது, ஒன்றையொன்று ஆக்கிரமிப்பு செய்வதை தடுக்க வேண்டும். அல்லது இவ்வாட்சி முறை நெருக்கடிகளை எதிர்நோக்கும்.

சமஷ்டி ஆட்சி முறையின் சிறப்பான இயல்பாகவும் அதன் வெற்றிக்கும் சுதந்திரமான நீதித்துறை காணப்பட வேண்டும். மத்திய மாநில அரசுகளுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை இந்த நீதித்துறை தீர்த்து வைக்க வேண்டும். அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஆகிய நாடுகளில் இது சிறப்பாகக் காணப்படுகின்றது. அமெரிக்க நீதித்துறை அமெரிக்க அரசியல் அமைப்பின் பாதுகாவலனாக விளங்குகிறது. சுவிற்சலாந்தில் மக்களிடம் அங்கீகாரத்தைப் பெற்று (மக்கள் தீர்ப்பு) மக்களின் முடிவே இறுதிமுடிவாகின்றது.

சமஷ்டியின் சிறப்புக்கும் அதன் வெற்றிக்கும் சமஷ்டியில் இணையும் மாநிலங்கள் சமமானதாகக் காணப்பட வேண்டும் பெரிய மாநிலங்கள் சிறிய மாநிலங்களில் ஆதிக்கம் செலுத்தக்கூடாது அதற்காக மாநிலங்களில் இருந்து இரண்டாம் மன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு சமமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் இரண்டாம் மன்றத்திற்கு சில கூடுதலான அதிகாரங்களை வழங்குவதன்மூலம் மக்கள் பிரதிநிதிகள் சபையை கட்டுப்படுத்த முடியும். அமெரிக்காவின் மாநிலங்கள் ஒவ்வொன்றும் சமமான பிரதிநிதிகளை இரண்டாம் மன்றமாகிய செனற்றுக்கு தெரிவு செய்கின்றன அத்துடன் அமெரிக்க இரண்டாம் மன்றத்திற்கு இரண்டு விசேட அதிகாரங்களும் அரசியல் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

(1) பிரதிநிதிகள் சபையின் முடிவுகளை செனற்சபை நிராகரிக்க

(2) ஜனதிபதியினால் செய்யப்படும் ஒப்பந்தங்களும் நியமனங்களுக்கும் அனுமதி மறுக்கும் அதிகாரங்களும் ஆகும்.

சமஷ்டியின் நிலைப்புக்கும் அதன் வெற்றிக்கும் மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் சீரானதாகக் காணப்பட வேண்டும். சட்டவாக்கம், நிர்வாகம் நீதி விடயங்களில் பரஸ்பர உறவுகள் இருக்க வேண்டும். இது சிறப்பாக இயங்காத காரணத்தினால் பெரும்பாலான நாடுகளில் சமஷ்டியைப் பாதிக்கின்றது. சிறப்பான சமஷ்டி நாடெனக் கூறும் அமெரிக்காவில் கூட மத்திய அரசு மாநிலங்களின் விடயங்களில் தலையிடுவதைக் காணலாம், உ+ம் மாநில ஆளுநர்களை தெரிவு செய்வதில் ஜனாதிபதியின் செல்வாக்கும், யுத்தம் கலவரம் ஏற்படும்போது மத்திய அரசின் படைகள் மாநிலங்களுக்குள் பிரவேசித்தல் என்பனவற்றையும் குறிப்பிடலாம். அண்மைக் காலங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும்போது மத்திய அரசின் அதிகாரம் கூடிவருவதைக் காணலாம். கனடாவிலும் மாநில ஆளுநர்கள் மத்திய அரசினால்தான் நியமிக்கப்படுகின்றார்கள். எல்லைகள் தொடர்பாகவும் பொருளாதார வளங்களைப் பகிர்தல் மற்றும் குடியேற்றம் கலாச்சாரங்களை பகிர்தல் ஆகியனவும் மாநிலங்கள் விட்டுக் கொடுத்து நடக்க வேண்டும். சமஷ்டியில் இணையும் அரசுகளுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டால் உடைவிற்கே வழிவகுக்கும். எனினும் சேருகின்ற அரசுகளுக்கிடையில் உறவினை ஏற்படுத்தல் என்பது சிக்கலான ஒரு விடயமாகும்.

அரசியல் அமைப்பின் மேலாண்மையும் சமஷ்டியின் வெற்றிக்கு வழிவகுக்கும் மாறாக திருப்திகரமற்ற ஒரு அரசியல் அமைப்பு சமஷ்டியின்உடைவிற்கு வழிவகும். மத்திய மாநில அரசுகள் அரசியல் அமைப்பைத் திருத்துவதில் மாற்றுவதில் பங்களிப்புச் செலுத்த வேண்டும். சர்வாதிகார ரீதியாக மத்திய அரசு சட்டங்களை திருத்த முயற்சிக்கக்கூடாது. அவ்வாறாயின் சமஷ்டி

தோல்வி அடையும். அமெரிக்காவின் சமஷ்டியில் இணைந்த மாநிலங்களின் ¾ பங்கு ஆதரவுடன் தான் அரசியல் அமைப்பில் திருத்தத்தைக் கொண்டுவர முடியும்.

சமஷ்டியால் இணைகின்ற அரசுகள் தாம் விரும்பும்போது பிரிந்து செல்லலாமா? என்பது முக்கிய பிரச்சனையாக உள்ளது. இன்று உலகில் பல சமஷ்டி நாடுகள் பிரிந்து சென்று புதிய அரசுகள் தோன்றி உள்ளன. சோவியத்தின் சமஷ்டி அமைப்பின் 35வது விதி பிரிந்து செல்லும் உரிமையை மாநிலங்களுக்கு வழங்கியுள்ளது. இதனால் சோவியத் சமஷ்டி சிதறுண்டது. ஆனால் சில நாடுகளில் அரசியல் யாப்பில் பிரிந்து செல்லும் உரிமை வழங்கப்படவில்லை. உ + ம் அமெரிக்காவில் பிரிந்து செல்லும் உரிமை மாநிலங்களுக்குக் கிடையாது. 1932-ல் மேற்கு அவுஸ்ரேலிய பிரிய முனைந்தது. ஆனால் வரவேற்கப்படவில்லை. 1966-ல் சிங்கப்பூர் பிரிந்தது. 1971-ல் பங்களாதேஸ் பிரிந்தது. இன்று யூக்கோசிலவாக்கியா பிரிந்தது. மேலும் பலநாடுகள் பிரிய முனைகின்றன. இதனால் சமஷ்டி முறையானது பலவீனமான முறை எனவும் குறிப்பிடலாம், டைசி குறிப்பிடும்போது மிகக் கூடுதலான சட்டங்களுடன் கூடிய ஆட்சி சமஷ்டி என்றும், பொருளாதார விருத்தி குன்றிய நாடுகளுக்குப் பொருத்தமற்றது என்றும் குறிப்பிடுகின்றார். எனினும் பல இனம் வாழுகின்ற இனப்பிரச்சனைகளையும் உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளை எதிர் நோக்கும் நாடுகளுக்கு சமஷ்டி பொருத்தமானது எனவும் கூறப்படுகின்றது. இனப்பிரச்சனைத் தீர்வுக்கு சமஷ்டிபொருத்தமானதா? என்பது கேள்விக்குரிய விடயமாகும்? இனப்பிரச்சனைகள் உள்ள இந்தியா, கனடா, ஆகிய நாடுகளில் பிரிவினைக் கோரிக்கை வலுவடைந்து வருவதைக் காணமுடிகின்றது. நடைமுறையில் உண்மையான சமஷ்டியை எந்தவொருநாட்டிலும் காணமுடியாது. எனவே சமஷ்டியின் சிறப்பான பண்புகள் ஒரு நாட்டில் காணப்பட்டாலும் மத்திய அரசின் அதிகாரமே மேலோங்கி வருவதை நாம் காண்கின்றோம். இவ் வேளையில் பிரதேச ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் வேறுபட்டு தமக்கென ஒரு பாரம்பரிய பூமியில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரித்து இலங்கையின் இனப்பிரச்சனைக்கு சமஷ்டி முறை மூலம் தீர்வுகாண முடியுமா? என்பது சந்தேகத்துக்குரிய விடயமாகும். உண்மையான சுதந்திரமான தம்மைத்தாமே ஆளுகின்ற மனப்பக்குவத்தை இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு தனி நாடொன்றின் மூலம்தான் ஏற்படுத்த முடியுமே ஒழிய இந்த அரைகுறை சமஷ்டி மூலம் அல்ல என்பதை யாவரும் அறிவர். இருபதாம் நூற்றாண்டில் நவீன அரசுகளில் சமஷ்டி முறையானது ஒற்றை ஆட்சி முறையை நோக்கி செல்வதை காணமுடிகின்றது. இதனால் வாஸ்கி குறிப்பிட்டது போல சமஷ்டியுகம் முடிவடைந்து விட்ட யுகம், என்பதிலிருந்து சமஷ்டி நடைமுறையில் அரசியல் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் இலங்கைக்கு எவ்வளவு தூரம் பொருந்தும் என்பதே இன்றுள்ள முக்கிய கேள்வியாகும். எனவே, இலங்கையின் இன நெருக்கடிக்கு சமஷ்டி ஒரு தற்காலிகத் தீர்வாக இருந்தாலும் முழுமையான தீர்வாக இருக்கமாட்டாது.

# ஐரோப்பிய மானிய சமுதாய பண்புகளும் சந்தைப் பொருளாதாரத்தின் தோற்றத்திற்கு வழிகோலிய காரணிகளும்

இராஜகோபால் நந்தகுமாரன் B. A. (Hons), M. A., M. sc. (Eng)
*(சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்துறை, யாழ் - பல்கலைக்கழகம்.)*

மானிய சமுதாய பொருளாதார அமைப்பு ஐரோப்பாவில் நிலவிய காலத்தினை வரையறை செய்வதில் பொருளாதார வரலாற்று ஆசிரியர்கள் மத்தியில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. உரோமப் பேரரசின் வீழ்ச்சியில் இருந்தே மானியப் பொருளாதார அமைப்பு தோற்றம் பெற்றதாகச் சிலரும், மிலேச்சப் படையெடுப்புக்கள் ஓய்ந்து அமைதி நிலவிய 9ஆம் நூற்றாண்டு காலந்தொட்டே மானிய பொருளாதார ஒழுங்கு ஆரம்பமாகியது என இன்னொரு சாராரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இங்கிலாந்தில் 5ம் நூற்றாண்டுகளில் ஆரம்பமாகி பின்னர் ஐரோப்பிய நாடுகளில் பரவியதாகவும் ஐரோப்பிய நாடுகளில் 9ஆம் நூற்றாண்டு முதல் வளரத் தொடங்கியது எனவும் கொள்வது பொருத்தமாகும். இதே போன்று மானியப் பொருளாதார அமைப்பு முடிவுற்று முதலாளித்துவ பொருளாதாரம் தோற்றம் பெற்ற காலப்பகுதியையும் ஐரோப்பா முழுவதற்கும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியாகக் கொள்வது சாத்தியமில்லை. மானிய பொருளாதார அமைப்பின் வீழ்ச்சி இங்கிலாந்தில் 12ம் நூற்றாண்டில் ஆரம்பமாகி ஐரோப்பிய கண்ட நாடுகளுக்கு பரவி ரஷ்சியாவில் 20ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை நீடித்தது எனலாம். எனவே மானியப் பொருளாதார அமைப்பு ஐரோப்பாவில் நிலவிய காலப் பகுதி பல நூறு வருடங்களைக் கொண்டதாகும். இக்காலப்பகுதியை மானிய முறைப் பொருளாதார அமைப்பிற்குட்பட்ட காலப் பகுதியெனக் கொண்ட போதும் நிலையான மாற்றமெதுவும் இடம் பெறாத காலமாக எண்ணிவிடக்கூடாது. இந்த நீண்ட காலப் பகுதியில் பலதரப்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் ஆரம்பத்தில் மானிய முறைப் பொருளாதாரத்தினை கட்டியெழுப்பவும் பின்னர் மானியப் பொருளாதாரத்தின் இறுக்கத் தன்மையை உடைக்கவும் முதலாளித்துவப் பொருளாதாரம் வேரூன்றவும் வழிகோலியது. ஆம் மாற்றங்கள் வெவ்வேறு நாடுகளில் வேறுபட்ட காலத்தில் இடம்பெற்றது. எனவே உரோமப் பேரரசின் வீழ்ச்சியில் ஆரம்பமாகி முதலாளித்துவத்தின் ஆரம்பம் வரையும் உள்ள காலம் மானியப் பொருளாதார அமைப்பு ஐரோப்பாவில் நிலவிய காலம் எனக் கொள்வது பொருத்தமாகும்.

இதில் ரஷ்சியா, ஜேர்மனியின் கிழக்குப் பகுதி அனைத்தும் 16ம் நூற்றாண்டளவிலேயே மானிய முறைப் பொருளாதார முறைமைக்குட்பட்டன. நாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட பேரரசுகளில் இடம்பெற்ற மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டு இந்நீண்ட காலத்தினை பின்வரும் உப பிரிவுகளாக வரையறை செய்வது பொருத்தமாகும். எனினும் மானிய காலப்பண்புகளையும் அவற்றின் வீழ்ச்சிக்கான காரணங்களையும் ஆராயும் போது கால வரம்புகளைக் கருத்திற்கொள்ளாமல் ஆராய்வதே பொருத்தமாகும்.

(1) 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் 9ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதி உரோமப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட உறுதியற்ற ஆட்சியும் பொருளாதார சீர்குலைவும், சிறிய அரசுகளின் தோற்றமும் அதனை நிர்வகிக்க ஒரு அமைப்பு

முறையின் தேவையும், இங்கிலாந்தில் மானிய முறையின் தோற்றமும் வளர்ச்சியும்.

(2) 9ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை இங்கிலாந்தில் மானிய முறை வேரூன்றி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவத் தொடங்கிய காலம். நாடுகளுக்கிடையே சிறிய அளவில் தொடர்புகள் ஏற்பட்ட காலம்.

(3) 12ஆம் நூற்றாண்டு முதல் 15ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம். இங்கிலாந்தில் மானிய முறை வீழ்ச்சிக்கு வித்திட்டு தனிமனித சுதந்திரம் வளர்ச்சியடைந்தது. வர்த்தக விரிவும் கலை, கலாச்சார மறுமலர்ச்சியும் ஏற்பட்டகாலம். 1315இல் இரு ஆண்டுப் பஞ்சமும், பெருங்கொள்ளை நோயும் ஐரோப்பிய நாடுகளில் சனத்தொகையில், பெரும் வீழ்ச்சியும். இங்கிலாந்து பிரெஞ்சுப் போர்.

(4) 15ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை வர்த்தக மறுமலர்ச்சி, நாடுகாண்பயணங்கள், இங்கிலாந்தில் தனிமனித சுதந்திரம் நிலை நிறுத்தப்பட்டு மேற்கு ஐரோப்பாவிற்கு பரவலாயிற்று. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மானிய முறை வலுப்பெற்றது.

(5) 17ஆம். 18ஆம் நூற்றாண்டுகளின் பின்னரைப் பகுதி வரை இங்கிலாந்தில் விவசாய அபிவிருத்தி கைத்தொழில் புரட்சி. பிரான்சில் குடிமக்கள் புரட்சியும், சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் என்ற கருத்துக்களின் அலை மேற்கு ஐரோப்பாவில் வீசத் தொடங்கியது.

(6) 18ஆம் நூற்றாண்டு பின்னரைப் பகுதி முதல் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை ஜேர்மன், ரஷ்சியா போன்ற நாடுகளில் தனிமனித சுதந்திரம் விவசாய விருத்தி. இயந்திர மயமான போக்குவரத்து மூலப்பொருட்கள் முடிவுப் பொருட்களுக்கான சந்தைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சியும், காலனிகளை உருவாக்கலும்.

மிலேச்சர்களது படையெடுப்பைத் தொடர்ந்து அரசுகள் சிதறுண்டு சிற்றரசுகளாக மாறிற்று. இதனால் அரசியல் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட இடைவெளியை இட்டு நிரப்பவும் குடிமக்களுக்கு பாதுகாப்பு வழங்கவும் ஒரு அமைப்பு அவசியமாயிற்று. இத்துடன் போக்குவரத்து சீர்குலைந்ததால் சுய தேவையை அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பே தேவைப்பட்டது. இந்த தேவையை பூர்த்தி செய்ய உருவாகிய, நிலத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்பே மானிய பொருளாதார அமைப்பாக விளங்கியது. உறுதியான ஒரு அரசு தோற்றம் பெற முடியாமையினால் அடிக்கடி படையெடுப்புகள் நிகழ்ந்தன. எனவே மக்களுக்கு பாதுகாப்பு அவசியமானதொன்றாக மாறிற்று. பாதுகாப்பினை வழங்க வலிமையுடையவர்களின் கீழ் மக்கள் கூட்டமாக ஒன்று சேரலாயினர். வலிமையானவர்கள் அரசனிடமிருந்து நிலத்தைப் பெற்று தன் கீழ் பாதுகாப்பு பெறும் மக்களுக்கு வழங்கி அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் பண வாடகை, பொருள் வாடகை, சேவைகளைக் கொண்டு தனது நிலத்தையும் பயிரிட்டு தனது பொருளாதார தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டான். மானிய அமைப்பானது பொருளாதார ரீதியில் நிலமற்ற ஒரு சாராரின் உழைப்பில் பிரபுவோ அல்லது தேவாலயமோ தங்கியிருப்பதையும் பிரபுவில் அல்லது தேவாலயத்தில் குடிமக்கள் பாதுகாப்பிற்கு தங்கியிருப்தையும் உற்பத்தியை குறித்து சுய தேவையை நோக்கமாகக் கொண்ட ஒரு அமைப்பாக விளங்குவதையும் காணலாம்.

மானிய கால சமூக பொருளாதார பண்புகள் நாடுகளுக்கிடையில் பெரிதும் வேறுபடவில்லை. ஒரு சில வேறுபாடுகள் தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது. இந்தப் பண்புகள் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொண்ட நாடுகளில் வேறுபட்ட காலத்

தில் காணப்பட்டதென்பதை மனங்கொள்ளல் வேண்டும். பொதுவாக நிலம் அரசனுக்கே சொந்தமானது. அரசனுக்கு சேவையாற்றுவதனால் நிலங்கள் மீதான ஆட்சி உரிமை பிரபுக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. சில இடங்களில் தேவாலயங்கள் இந்த உரிமையைப் பெற்றிருந்தன. இந்த பிரபுவின் பாதுகாப்பிற்கு உட்பட்ட பிரதேசம் பண்ணை எனப்பட்டது. இதிலே பண்ணை வீட்டைச் சுற்றியுள்ள நிலம் பிரபுவினுடையதாகவும் அதற்கப்பால் உள்ள நிலம் குடிமக்களுக்குரியதாகவும் ஏனையவை பொது நிலமாகவும் இருந்தது. பொது நிலத்திலே குடிமக்கள் கால் நடைகளை மேய்ப்பதற்கும் விறகுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வழக்கப்படி உரிமையிருந்தது. ஒரு சில குடிமைகள் நிலத்திற்குச் சொந்தமானவர்களாகவும் விடுதலை பெற்றவர்களாகவும் இருந்தனர். பெரும்பாலான குடிமைகள் பிரபுவினுடைய நிலத்தில் வாழ்வூதியத்திற்கு தங்கியிருப்பவராக இருந்தனர். பிரபு, குடிமைகளுக்கிடையிலான உறவு மானிய முறையில் ஆரம்ப காலங்களில் சுமூகமாக இருந்ததை காணக்கூடியதாக இருக்கின்றது. கடமை வேலைகளின் பழு, போதிய நேரம் செலவிட்டு தமது நிலங்களை உற்பத்தி செய்ய முடியாத நிலை, தமது உழைப்பை பணத்திற்கு விற்கக்கூடிய வாய்ப்பு, பாதுகாப்பிற்காக தங்கியிருக்கவேண்டிய நிலையில் மாற்றம் போன்ற இன்னோரன்ன காரணங்களால் இவர்களுக்கிடையிலான உறவுகள் விரிசலடைவதையும் காணக்கூடியதாக உள்ளது.

நிலவுடமையைப் பொறுத்து பிரான்சிலே குடியானவர்கள் பெரும்பாலும் நிலத்திற்கு சொந்தக்காரராகவே இருந்தனர். நிலத்தைப் பொறுத்து சுதந்திரமானவர்களாக இருந்தும் அவர்கள் மீது அறவிடப்பட்ட வரிகளும் அதனால் விவசாயக் குடிமக்கள் அடைந்த துன்பமும் சொல்ல முடியாதவையாய் இருந்தன. வரிமுறைகள் மூலம் மானியக் கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டிருந்தன. ஜேர்மனியை நோக்கினால் எல்பநதியின் கிழக்காகவும் மேற்காகவும் இருவேறுபட்ட நிலைமைகள் காணப்பட்டன. கிழக்கே 'யுங்கர்' எனப்படும் பெருநில விவசாயிகள் இருந்தனர். மேற்கே றைன்நதியை அண்டிய ஒரு மாகாணத்தில் கைத்தொழிலும் காணப்பட்டது. ஜேர்மனியின் மேற்குப் பகுதி பிரான்சு இங்கிலாந்துடனான தொடர்பு அதிகம் கொண்டிருந்த காரணத்தினால் மானிய முறைப் பண்புகளை அதிகளவில் கொண்டிருந்தது. கிழக்குப் பகுதியோ ஸ்லோவ் பகுதிகளில் இருந்து வெற்றிகொள்ளப்பட்டமையால் 16ஆம் நூற்றாண்டளவிலேயே மானிய முறைப் பண்புகளைப் பெற்றுக் கொண்டது. கிழக்கிலே ஆரம்பத்தில் இருந்து நிலம் வாங்கும், விற்கும் உரிமைகளை மானிய முறையின் கீழ் இழந்தவர்கள் 19ஆம் நூற்றாண்டிலேயே மீளவும் பெற்றுக் கொள்ள முடிந்தது. மேற்குப்பகுதியில் மானியப் பண்புகள் வீழ்ச்சியடையத் தொடங்க, கிழக்கிலே அவை வலிமை பெறலாயிற்று.

ரஷ்சியாவிலும் ஜேர்மனியின்கிழக்கைப் போலவே 15ஆம் நூற்றாண்டின் பின்னரே குடிமக்கள் சுதந்திரம் பாதிக்கப்பட்டது, நாடோடிகளாக சுதந்திரமாக திரிந்த விவசாயிகள் நிலத்துடன் பிணைக்கப்பட்டு மேற்கு ஐரோப்பிய அடிமை முறையிலும் கீழான சுதந்திரமற்ற முறைக்கு தள்ளப்பட்டனர். இங்கு 'மீர்' என்ற அமைப்பு குடிமைகளுக்கு நிலம் வழங்கியது. இந்த அமைப்பு வரி அறவிடும் ஒரு அமைப்பாகவும் விளங்கியது. வரியைச் செலுத்தாத ஒரு விவசாயி சுதந்திரமாக வெளியேற முடியாதிருந்தது. இங்கு அந்த அமைப்பினால் நிலம் அடிக்கடி மீள பங்கீடு செய்யப்பட்டமையால் மக்கள் நிலத்தைப் பண்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதில் ஆர்வம் காட்டவில்லை. ரஷ்சியாவிலும் புரட்சிக்கு முந்திய பிரான்சிலும் தனிமனித சுதந்திரம் வரி அமைப்பினால் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளில் சனத்தொகை அதிகரித்தபோது பகிர்ந்தளிக்க போதிய நிலம் இல்லாத காரணத்தால் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ரஷ்சியாவில் போதியளவு நிலம் இருந்தபடியால்

நிலத்தின் உற்பத்தியை பெருக்குவதில் பிரபுக்கள் ஆர்வமுடையவராக இருக்க வில்லை. 19ஆம் நூற்றாண்டு வரை விரிந்த பயிர்ச் செய்கையையே மேற்கொண்டனர்.

எல்லா நாடுகளிலும் மானிய முறை அமைப்பின் கீழ் நிலமானது சிறுதுண்டு களாக சிதறுண்டு காணப்பட்டது. இத் துண்டுகளின் அளவு நாட்டுக்கு நாடு வேறு பட்டது. ஒவ்வொரு துண்டு நிலமும் எல்லை வகுக்கப்பட்டிருந்ததால் பெருமளவு நிலம் பயிர்ச் செய்கைக்கு உட்படாமல் வீணாக் கப்பட்டது. நிலம் சிதறுண்டு இருந்ததால் விவசாயிகள் அதிகளவு நேரத்தை போக்கு வரத்திற்கு செலவு செய்ய வேண்டியும், விதைகள் உழவு சாதனங்கள் போன்ற வற்றைக் கொண்டு செல்வதில் பெரும் இடர் பாட்டினையும் எதிர் நோக்கினர். ஒரு குடியானவனுடைய இரு துண்டுகளுக்கிடை யிலான தூரம் பல மைல்களாக காணப் பட்ட சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இவ்வாறு நிலம் சிதறுண்டு காணப்படுவ தற்கு சமூக நீதியே காரணம் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நிலம் பலதரப்பட்ட வளத்தினைக் கொண்டிருப்பதனால் ஒருவ ருக்கு பல்வேறுப்பட்ட நிலங்களில் நிலத் துண்டங்கள் இருக்குமானால் அவரது உற் பத்தி சராசரியாக பேணப்படலாம் என்ற நோக்கே இதற்கு காரணமாகச் சொல்லப் படுகின்றது.

இந் நிலங்களில் இருவயல் முறை, மூவயல் முறை என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் பயிர்கள் செய்யப்பட்டன. ஒரு துண்டு நிலத்தில் தானியப் பயிரும் மற்றொன்றில் பார்லி அல்லது அவரைப் பயிரும், பிறிதொன்று பயிர் செய்யப்படா மலும் விடப்பட்டது. இந்த முறையில் ஏதாவது ஒரு துண்டு நிலம் தரிசாக விடப் பட்டு நிலத்தின் செழிப்பு பேணப்பட்டது. பசளையிடும் முறைகளை அறிந்திருக்க வில்லை. கால்நடைகள் குறைவாக இருந்த படியால் இவற்றில் இருந்து பெற்ற கழிவு களே நிலத்திற்கு பசளையாகப் பயன்படுத் தப்பட்டன. கால்நடை வளர்ப்பு ஒரு விவ சாய நடவடிக்கையாக முன்னேற்றமடைய வில்லை. அவற்றின் வலு உழவு கலப்பை களை இழுப்பதற்குதேவையாக இருந்தது. கால்நடைகளை பனிக் காலத்தில் பரா மரித்து பேண முடியாத காரணத்தினால் அவற்றைக் கொன்று உணவாக்கினர். இத னால் கால்நடைகளைப் பெருக்க முடிய வில்லை. பயன்படுத்திய உழவு சாதனங்கள் மிகவும் பழைமையானவை. அநேகமாக பிரபுக்களுக்கே சொந்தமாக இருந்தது. ஒரு சில சுதந்திரமான விவசாயிகள் வயல் உழ விற்கு தேவையான கால்நடைகளையும் உபகரணங்களையும் வைத்திருந்தார்கள். ஜேர்மனியில் குறிப்பாக கிழக்குப் பகுதியில் குடிமை ஒழிப்பிற்கு இயற்றப்பட்ட சட்டத் தின்படி முழு விசாயிகள் மட்டும் நிலவுரி மையைப் பெற்றுக்கொள்ள அருகதையுடை யவராக இருந்தனர். யார் இந்த முழு விவசாயிகள் என நோக்கினால் ஒரு சோடி உழவு மாடுகளுக்குச் சொந்தக்காரராகவும் பரம்பரையாக நிலத்தில் பயிர் செய்பவர் களுமே முழு விவசாயிகளாகக் கருதப்பட் டனர். இதன் மூலம் குடிமைகள் விடுதலை பெறுவதை தடுக்கக் கூடியதாக இருந்தது. எந்தளவு தூரம் குடிமைகள் உற்பத்திக் காரணிகளை சொந்தமாக கொண்டிருக்க வில்லை என்பதையே இது காட்டுகின்றது. மானிய கால வாழ்க்கையில் ஐரோப்பா எங்கும் குடிமைகள் நிலத்தோடு பின்னிப் பிணைந்திருந்தையும், நிலத்தின் உரிமை பிரபுவிடம் குவிந்திருந்ததையும், பிற்போக் கான பயிர்ச் செய்கை முறை ஏறத்தாழ ஒரே முறையில் ஒரே வகையான தானியப் பயிர்களை பயிரிட்டு வந்ததையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

விவசாயம் மேலோங்கி இருந்தபோதும் கைத்தொழில்களோ வர்த்தகமோ இல்லா திருக்கவில்லை. இவை சிறிதளவில் காணப் பட்டது. ஆரம்பத்தில் பிரபுவின் பண்ணை வீட்டைச் சுற்றியுள்ள பகுதியே கைத் தொழில் நிலையங்களாக விளங்கின. மா அரைக்கும் ஆலையும் பழங்களில் இருந்து பழரசம் தயாரிக்கும் ஆலையும் பாண் போறணைகளும் இன்னபிற சிறு கைத் தொழில்களும் பிரபுவிற்கு சொந்தமாக இருந்தன. இவற்றில் இருந்து பயன்களைப்

பெற்றுக்கொள்ளும் குடிமைகள் அவற்றிற்கு பண வடிவிலோ பொருள் வடிவிலோ செலுத்துகையை செய்தல் வேண்டும். பின்னர் நகர்ப்புறங்களில் வர்த்தக கைத்தொழில் நிறுவனங்கள் தோன்றின. இவை கில்ட்டுக்கள் என்று சொல்லப்படும் குழுக்களினால் நிர்வகிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டன. மானிய காலத்தின் நடுப்பகுதியில் வணிக கில்ட்டுகள், கைத்தொழில் கில்ட்டுகள், சக்தி வாய்ந்தவையாக இருந்தன. ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு கில்ட் காணப்பட்டது. நகர்ப்புற கைத்தொழில்கள் பண்ணைக்குள் அடங்காத கைத்தொழில்களாக இருந்தன. கில்ட்டுகளின் அனுமதியின்றி ஒருவர் தொழிலில் இறங்க முடியாது. இன்னொரு வகையில் கூறுவதானால் தற்கால தொழிற் சங்கத்தினை ஒத்தவையாக இவை காணப்பட்டன. எனினும் தற்கால தொழிற் சங்கங்கள் தொழிலாளர் நலனை மட்டுமே கருத்திற் கொண்டு இயங்குகின்றன என்ற வசை மொழிக்கு உட்படுவதுண்டு. ஆனால் கில்ட்டுக்கள் தொழிலாளர் நலனைவிட வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதில் ஆர்வமுடையனவாக விளங்கின.

ஒவ்வொரு தொழில் கில்ட்டிலும் தொழில் முதல்வோர் பிரதானமானவராக இருந்தனர். இவர்களின் கீழ் பயிற்சி பெற்ற தொழிலாளியும் தொழில் பயில்வோரும் இருந்தனர். தொழில் பயில்வோர் தொழில் முதல்வரோடு தங்கியிருந்து அவருக்கு கடமைகள் செய்து தொழில் பயின்றனர். தொழில் பயிலும் காலம் தொழிலுக்கு தொழில் வேறுபட்டது. தொழில் பயில்வோருக்கு உணவு, உறைவிடம் யாவும் தொழில் முதல்வோரால் வழங்கப்பட்டது. கில்ட் அமைப்பின் சட்டதிட்டங்கள் பொதுவாக கூலி, வேலை நிபந்தனைகள் பற்றி தெளிவாக வரையறை செய்தன. இவற்றிற்கும் மேலாக சமூக சார்பான விடயங்கள் பற்றியும் எடுத்தியம்பியது. எனவே கில்ட் அமைப்பானது உற்பத்தியை மட்டுமல்லாது அதன் கீழுள்ள அங்கத்தவர்களது சமூக நடவடிக்கையையும் கட்டுப்படுத்தியது. சுயமாக இயங்குவதற்கு இடமளிக்கவில்லை. தற்கால உற்பத்தி நிறுவனங்களோடு ஒப்பிட்டு நோக்கினால் இவை பணத்தை சம்பாதிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டிராமல் ஒழுங்கான வாழ்க்கை முறைக்கு வழி கோலிய அமைப்பாக விளங்கின. அங்கத்தவர் எல்லோருக்கும் நியாயமான வாழ்க்கையை உறுதி செய்தது. ஆனால் எவரையும் தனியுரிமை பெற்றுக்கொள்ள இடமளிக்கவில்லை. வழக்கத்தின்படி சகல அம்சங்களும் தீர்மானிக்கப்பட்டன. உற்பத்தி விற்பனையில் ஒழுக்கவியல் தேவைகளுக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. மீறுவோர் தண்டிக்கப்பட்டனர். பண்ணை அமைப்பைவிட வளர்ச்சி கண்டிருந்த போதும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டதால் முன்னேற்றத்திற்கு தடையாக விளங்கியது. வணிக கைத்தொழில் கில்ட்டுகள் பண்ணை அமைப்பில் இருந்து நவீன மயமான அல்லது வளர்ச்சியடைந்த ஒரு அமைப்பாக விளங்கியது. மானிய முறை அமைப்பிலே குடிமக்கள் மத்தியில் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு நீதி வழங்குகின்ற பொறுப்பும் பிரபுக்களுக்கு இருந்தது. அதற்காக பணத்தையோ பொருளையோ பெற்றுக்கொள்ளும் நடைமுறையும் ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்டது.

மானிய முறைப் பொருளாதாரத்தின் மேற்கூறிய பண்புகள் ஐரோப்பா எங்கும் ஏறத்தாழ அதிக வித்தியாசமில்லாமல் இருந்தன. இந்த அமைப்பு முறையில் இருந்து விடுபட்டு புதியதொரு மாற்றத்திற்குள் செல்வதற்கு பல முன் தேவைகள் அவசியமாயிற்று. பொருளாதார அம்சங்கள் முதல் நிலைக்கு தள்ளப்பட வேண்டியிருந்தது. இரண்டாவதாக பொருளாதார விருத்திக்கு சந்தை முறையில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற பொருளாதார நடவடிக்கைகள் பணமயப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பணத்தை அனைவரும் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு அதிகரிக்க வேண்டியிருந்தது. உற்பத்தி பெருக வேண்டுமானால் அவற்றிற்கு ஒரு சந்தையும் அவற்றை வாங்குவதற்கான சக்தியும் மக்கள் மத்தியில் இடம்பெற வேண்டியிருந்தது.

அடுத்ததாக தீர்மானம் எடுத்தலில் வழமையான சட்ட திட்டங்கள் வகித்த இடத்தினை சந்தைச் சக்திகள் வகிக்க வேண்டிய தேவையிருந்தது. எனவே மானிய முறைப் பொருளாதார அமைப்பு ஏற்படுவதற்கு முன்தேவையாக மேற்சொல்லப் பட்ட மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு தூண்டுதலாக இருந்த காரணிகளை நோக்குவோம். அதாவது மானியமுறை ஒழிந்து சந்தைப் பொருளாதாரம் ஆரம்பமாக துணை செய்த காரணிகளைப் பார்ப்போம்.

மானிய காலபண்புகளில் வழக்கம், மரபு, அதிகாரம், நெகிழ்வின்மை, என்பவை முதலிடம் வகித்தன. காலப் போக்கில் இவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றத்திற்கு அடிப்படையாக விளங்கிய பல் வேறுபட்ட காரணிகள் பிராந்தியத்திற்குப் பிராந்தியம், நூற்றாண்டுக்கு நூற்றாண்டு அல்லது வெவ்வேறு நாடுகளில் வேறுபட்டுக் காணப்பட்டது. அவற்றினால் கொண்டுவரப்பட்ட மாற்றம் ஒரே தன்மையானவை என எண்ணிவிடக் கூடாது. முதலாளித்துவ சந்தைப் பொருளாதார முறையை நோக்கி சமூகத்தினை அசைத்துச் சென்ற காரணிகள் மெதுவாக ஆனால் உறுதியாக சமூக மாற்றங்களைக் கொண்டு வந்தன. இங்கிலாந்தில் 12ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகி ரஷ்சியாவில் 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை செயல்பட்டன. மாற்றங்கள் கண்ணுக்குப் புலப்பட்டபோது பின்னணியில் இருந்த காரணிகளை அறிந்து கொள்ள முடியாத நிலையும் இருந்தது. மாற்றத்தினை ஏற்படுத்திய காரணிகளில் குறிப்பிடத்தக்கவையாக நாடோடி வியாபாரிகள், நகராக்கம், சிலுவை யுத்தம், தேசிய அரசாங்கத்தின் எழுச்சி, அரச ஆதரவிலான நாடுகாண் பயணங்கள், சமயச் சூழலில் ஏற்பட்ட மாற்றம், உழைப்பினை நாணயத்திற்கு மாற்றும் நடவடிக்கை, நிலவடைப்பு, சட்டவாக்கம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**நாடோடி வியாபாரிகள் :**

12ஆம் நூற்றாண்டு ஆங்கிலேயர் இந்த வியாபாரிகளை தூசி படிந்த கால்களைக் கொண்டவர்கள் என்ற கருத்தில் அழைத்தார்கள். இவர்கள் நீண்டதூரம் பிரயாணஞ்செய்து நகரங்கள் கிராமங்கள் தோறும் தங்கி வியாபாரம் செய்தனர். அரேபியா, இந்தியா போன்ற இடங்களில் இருந்தும் இவர்கள் வியாபாரஞ் செய்ய ஐரோப்பிய நாடுகளுக்கு வந்தனர். இவர்கள் பணத்திற்கே வியாபாரஞ் செய்தனர். கணக்கு முறைகளை நன்கு அறிந்திருந்தனர். இவர்களுக்கு சமூகத்தில் குறைந்தஇடமே வழங்கப்பட்டது. இவர்களில் சிலர் குடிமைகளின் வாரிசாகவும் இருந்தனர். பிரபுக்களுக்கு இவர்களின் எழுச்சி விரும்பத்தகாததாக இருந்த போதும் இவர்களது சேவை அவசியமானதாக இருந்தது. இவர்களது சொந்த முயற்சியால் 14ஆம் 15ஆம் நூற்றாண்டளவில் வர்த்தகம் சிறப்பாக ஒழுங்கு படுத்தப்பட்டு விட்டது. இவர்கள் தான் உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் வர்த்தகமற்று, சுயதேவையடிப்படையில் உருவாகியிருந்த ஐரோப்பிய பண்ணை அமைப்பிற்கு வர்த்தகத்தை கொண்டுவந்தவர்கள் எனலாம். இவர்கள் ஐரோப்பாவில் தனித்த அலகாக விளங்கிய பல இடங்களுக்கும் பிரயாணஞ் செய்து பொருட்களை வாங்கி விற்று இந்த இடங்களுக்கிடையில் தங்கியிருத்தல் நிலையை உருவாக்கினார்கள் என்றால் மிகையாகாது.

**நகராக்கம் :**

வழிப்போக்கு வியாபாரிகளது அதிகரிப்பின் ஒரு விளைவு நகராக்கம் ஆகும். புதிய கிராமங்களும் நகரங்களும் உருவாகின. வழிப் போக்கு வியாபாரிகள் பாதுகாப்பான இடங்களாக விளங்கிய உள் நாட்டு அரண்மனை அல்லது தேவாலயங்களை அண்டிய பகுதிகளைத் தரிப்பிடமாக தெரிவு செய்தனர். எனவே இந்த இடங்களின் பாதுகாப்புச் சுவர்களைச் சுற்றி நிரந்தரமான வர்த்தக மையங்கள் தோன்றின. நாளடைவில் இவை ஒரு சிறு நகரத்தின் உட்கருவாக மாறின. இதில் வாழ்ந்தவர்கள் பண்ணை வீடுகளை விட்டு வெளியேறியவராக இருந்தனர். இவை பிரதான சமூக அமைப்பில் இருந்து வேறுபட்ட அலகாக உருவாகின. தமக்கென்று புதிய

சட்டதிட்டங்களை உருவாக்கிக் கொண்டனர். ஆட்சி அமைப்பினைத் தோற்றுவித்தனர். எனினும் நகரங்களின் வளர்ச்சி மிகவும் மெதுவான செயற்பாடாக இருந்தது. உதாரணமாக இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நகரத்தில் 1086ஆம் ஆண்டு முதல் 1279ஆம் ஆண்டு வரை சராசரியாக வருடமொன்றுக்கு ஒரு வீடு என்ற வீதத்திலேயே வளர்ச்சியடைந்தது. இதற்கு பிரதான காரணம் ஐரோப்பாவின் சீரழிந்து போன போக்குவரத்து ஆகும். உரோம இராய்ச்சியத்தின் போது காணப்பட்ட வீதிப்போக்குவரத்து ஐரோப்பாவில் மீண்டும் 18ஆம் அல்லது 19ஆம் நூற்றாண்டிலேயே தோன்றிற்று என்றால் மானிய காலத்தின் பெரும்பகுதியில் மக்களும் பொருட்களும் நகர்வதற்கு போதிய பாதைகள் இருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. நகர வளர்ச்சி மெதுவாக இருந்தாலும் உறுதியாக இருந்தது. மானிய காலத்திற்கு உட்பட்ட ஆயிரம் ஆண்டுகளிலும் ஆயிரம் நகரங்கள் தோன்றிற்று. ஒவ்வொரு நகரமும் எல்லா வகையிலும் தனித்துவமாக விளங்கின. இவை ஐரோப்பிய பொருளாதார வாழ்க்கையில் சந்தைப்படுத்தலை அறிமுகப்படுத்துவதில் பிரதான காரணியாக விளங்கின.

**சிலுவை யுத்தங்கள் :**

சந்தை அமைப்பிலான சமூகம் தோற்றம் பெறுவதற்கு துணை புரிந்த முன்றாவது காரணியாக சிலுவை யுத்தங்களைக் குறிப்பிடலாம். தேவாலயங்கள் வெகுவாக எதிர்த்த ஒரு சமூக அமைப்பை இவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட சிலுவை யுத்தங்கள் உருவாக்கியது வருந்தத் தக்க வரலாற்றுத் திருப்பம் எனலாம். புதியவற்றைக் கண்டறிதல், குடியேற்றங்களைத் தோற்றுவித்தல் என்ற வகையில் சிலுவை யுத்தங்களது பொருளாதாரத் தாக்கம் அளப்பரியது. இவற்றினால் சடுதியாகவும், ஆச்சரியப்படத்தக்க வகையிலும் இரு வேறுபட்ட உலகங்களுக்கிடையில் தொடர்பு ஏற்பட்டது. ஐரோப்பிய மானிய சமுதாயத்தின் வழக்கங்கள் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட பின்தங்கிய நாடுகள் ஒருபுறம் உள்ள நிலையில் பைசாண்டியம், வெனிஸ் போன்ற பணப்புழக்கம் மிகுந்ததும் வியாபாரச் செழிப்பு நிறைந்ததுமான கிழக்குப்புற நகரங்கள் மறுபுறமும் சிலுவை யுத்தத்தினால் இணைக்கப்பட்டன. 1202 - 4க்கு இடையில் இடம்பெற்ற நான்காவது சிலுவை யுத்தம் வெனிஸ் நகரத்திற்கும், ஈடுபட்ட பிரபுக்களுக்கும் பொருளாதார ரீதியாக சன்மானம் வழங்கியது. சாரு, கொன்ஸ்டான்டி நோபிள் போன்ற வர்த்தக மையங்கள் வீழ்ச்சியடைந்த போது யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் பெற்ற பங்குகள் சிறிய முதலாளிகளைத் தோற்றுவித்தது. நிலத்தினை அடிப்படையாகக் கொண்ட பண்ணையாளர்கள், பணத்தினை அடிப்படையாகக் கொண்ட வியாபார சமூகத்தினது வாழ்க்கை வழிகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு தமது வாழ்க்கையையும் மாற்ற சிலுவை யுத்தங்கள் தூண்டுதலாக அமைந்தன.

**தேசிய அரசின் வளர்ச்சி :**

துண்டாடப்பட்ட ஐரோப்பிய அரசுகளை ஒன்றாக்கி பெரிய அரசியல் அலகுகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் பொருளாதார வாழ்க்கையினை வர்த்தகமயப்படுத்துவதற்கு உதவியது. வலுவான ஒரு பொருளாதார சமூகத்திற்கு சக்திவாய்ந்ததும் விரிவானதுமான ஒரு அரசியல் அடிப்படை அவசியம் என்பதை உரோமப் பேரரசின் வரலாறு உணர்த்தியது. எனவே ஐரோப்பாவினை மிகவும் ஒருங்கிணைக்கின்ற முயற்சிகள் மெல்ல மெல்ல வளர்ச்சியடைய பொருளாதார வளர்ச்சியும் அதிகரித்தது. மத்திய காலத்திற் காணப்பட்ட தனித்துவமான பல ஆட்சி அலகுகள் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருந்தது. ஒரு நூறு மைல் பிரயாணஞ் செய்கின்ற ஒரு வியாபாரி பல்வேறுபட்ட இறமையுள்ள பிரதேசங்களையும் சட்டங்களையும் பல தரப்பட்ட நிறுத்தல் அளத்தல் அலகுகளையும் பண அலகுகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. பல இடங்களில் வரி செலுத்த வேண்டும். ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நகரங்களில் ஒருவழிப் பாதையிலேயே பல இடங்களில் வரி செலுத்துவதன்

மூலம் பொருளினது விலை பன்மடங்கு உயர்ந்தது. இந்த வகையில் இங்கிலாந்து ஒரு அரசியல் அலகாக விளங்கியமையே ஐரோப்பாவில் முதலாவது பொருளாதார வலுவான நகரமாக வளர்ச்சியடைய ஏது வாக இருந்தது. பின்னர் ஜேர்மனியின் விரைவான வளர்ச்சிக்கு பிஸ்மாக்கின் அர சியல் ஒன்றிணைப்பும் ''சொல்வரைன்'' என்னும் சுங்கவரிச் சங்க அமைப்பும் பிர தான பங்கு வகித்திருப்பதும் கண் கூடு. நகர்ப்புற வியாபாரிகள் அரசர்களோடு சேர்ந்து அவர்களுக்குத் தேவையான பண வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் மானியப் பிரபுக்களது அதிகாரங்களை இல்லாதொழித்து மையப் படுத்தப்பட்ட உறுதியான ஆட்சியை உருவாக்க முடிந்தது.

**அரச ஆதரவிலான நாடு காண் பயணங்கள் :**

வலிமையான ஆட்சி அதிகாரங்கள் படைத்த அரசுகள் தோற்றம் பெற்றதும் அரச ஆதரவிலான நாடுகாண் பயணங்கள் இடம் பெற்றன. நாடுகாண் பயணங்கள் அரசினுடைய நிதி வளங்களைப் பெருக்கு வதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இந்த துணிகர பயணங்களது பொருளாதார நலன்கள் அளப்பரியது. தென் அமெரிக்க நாடுகளான மெக்சிக்கோ, பெரு போன்ற இடங்களிலும் கலிபோர்ணியாவிலுமிருந்து ஸ்பெயினுக்கு விலைமதிப்புடைய உலோ கங்கள் வந்து குவிந்தன. இவை ஐரோப் பிய நாடுகள் அனைத்திற்கும் ஸ்பெயினில் இருந்து பரவியது. இதனால் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பணப்புழக்கம் அதிகரித்து விலைகள் உயர்ந்தன. 1520 - 1650க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் விலைகள் 200 தொடக்கம் 400 சத வீத மாக உயர்ந்ததாக மதிப்பிட்டுள்ளனர். இது உற்பத்தி வர்த்தகப் பெருக்கத்திற்கும், உத்தேச நோக்கு லாபம் கருதி முதலீடு செய்யவும் தூண்டுதலாய் இருந்தது. நீண்ட கால நன்மையாக காலனித்துவ நாடுகள் உருவாகின. இவை மூலப் பொருள் வழங் கிகளாகவும் முடிவுப் பொருள் சந்தைக ளாகவும் இருந்தமையால் உற்பத்தியும் வர்த்தகமும் செழிப்புற வாய்ப்பளித்தன. புதிய நாடுகளின் கண்டு பிடிப்பு பழைய நாடுகளை உருமாற்றி அமைப்பதில் ஆரம் பத்தில் இருந்தே தூண்டியாக விளங்கியது.

**மதச் சூழலில் ஏற்பட்ட மாற்றம் :**

மேற்குறிப்பிட்ட காரணிகளுக்கு அப் பால் ஆணித்தரமாக ஆனால் மறைமுக மாக மக்கள் மத்தியில் உள்ள நம்பிக்கையை ஐரோப்பியர்களது தன்மைகளை மாற்றி யமைத்தது மதச் சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றமாகும். ஆரம்பத்தில் கத்தோலிக்க மதச் சிந்தனைகள் வர்த்தக அடிப்படையி லான வாழ்க்கைக்கு பெரும் தடையாக இருந்தது. இலாபம் உழைத்தல், வட்டிக் குப் பணம் கொடுத்தல் போன்றவற்றை வெகுவாகக் கண்டித்தன. நாளடைவில் தேவாலயங்களே பொருளாதார முக்கியத் துவம் நிறைந்த செயற் பாட்டுத் தலங்க ளாக மாறின. ஐரோப்பா முழுவதும் அதிகளவில் பணம் சேகரித்து விநியோ கித்த பெருமை தேவாலயங்களையே சாரும். தேவாலயங்களின் உப பிரிவுகள் அரசர்களுக்கு கடும் நிபந்தனைகளுடன் கடன் வழங்கி வந்தன. இதனால் தேவாலயங்களினது சிந்தனையிலும் செய லிலும் மாற்றங்கள் எழுந்தன. புரட்டஸ் தாந்து மதத்தினை சேர்ந்த ஜோன்கல்வின் என்பவரது போதனைகளே கத்தோலிக்க தேவாலயங்களது சிந்தனையில் மாற்றத் தினை தோற்றுவிக்கக் காரணமாக இருந் தது என ஜேர்மன் சமூகவியலாளர் மார்க்ஸ் வெபரும் ஆங்கில பொருளாதார வர லாற்று ஆசிரியரான ரௌனியும் குறிப் பிட்டுள்ளனர். கல்வினிசம் நேர்மை யான கடும் உழைப்பினை ஊக்குவித்தது. கத்தோலிக்க சமயத்திற்கு முரண்பட்ட வகையில் கல்வினிசம் முயற்சியாளர்களைத் தூண்டி வர்த்தக நோக்கிலான ஒரு சமூகம் வளர்ச்சி பெற வேண்டிய சமயச் சூழ் நிலையைத் தோற்றுவித்தது. சேமிப்பினை ஊக்குவித்து முதலிட தூண்டியது. 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் பொருளாதார முன்னணியில் நின்ற நாடுகள் பெரும்பாலும் புரட்டஸ்தாந்து போதனைகளினால் கவ

ரப்பட்டு தமது பொருளாதார சமூக அடிப்படை எண்ணக் கருக்களை மாற்றிக் கொண்ட நாடுகளாகவே காணப்பட்டன.

இந்தக் காரணிகள் பொதுவாக ஐரோப்பா முழுவதும் வேறுபட்ட அளவிலே செயற்பட்டதன் மூலமே மானிய முறைப் பொருளாதார அமைப்பு வீழ்ச்சியுற்று முதலாளித்துவ பொருளாதார அமைப்பு தோற்றம் பெற வாய்ப்பு ஏற்பட்டது. பணமாற்றுகை, சனத்தொகை அதிகரிப்பு, வளர்ச்சியடைந்து வரும் பிரபுக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய பணம் தேவைப்பட்டமை, பண்ணைகளில் உற்பத்தி இடம்பெறாத போது தொழிலாளர்களைப் பராமரித்து செலவு செய்தலை தவிர்க்கும் நோக்கம், கூலிக்கு தொழிலாளரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு போன்ற காரணங்களால் விருப்பத்துடன் படிப்படியாக மானியப் பொருளாதார அமைப்பின் பணப் பிரயோகம் அதிகரித்தது. எனினும் பிரபுக்கள் சில கடமை வேலைகளில் இருந்து குறிப்பாக தொழிலாளர் நிரம்பல் குறைவான போது மாற்றுகையை விரும்பவில்லை. மாற்றுகை மூலம் விடுதலைபெற குடிமைகள் தொடர்ந்தும் நெருக்குதல் கொடுத்ததனால் பிரபுக்கள் தவிர்க்க முடியாமல் செயல்பட்டனர். அத்துடன் பிரபுக்களது பணத்தேவையும் தொடர்ந்து வளர்ச்சியடைய பணமயமாக்கல் விரைவு படுத்தப்பட்டது. இதனால் தொழிலாளர் மீதும் நிலத்தின் மீதும் பிரபுக்கள் கொண்டிருந்த கட்டுப்பாடுகளை இழந்தனர். வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதித்த புதியதொரு வர்க்கம் நிலத்தின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய நிலை தோன்றியது.

இந்தப் பொதுவான காரணங்களை விட ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு சில சிறப்பான காரணங்களும் மானிய முறையின் வீழ்ச்சிக்கும் முதலாளித்துவத்தின் தோற்றத்திற்கும் காரணமாக இருந்தன. இங்கிலாந்தில் நில அடைப்பு இயக்கம் சிறப்பான ஒரு காரணியாகும். ஏனைய நாடுகளிலும் நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பேரளவு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டாலும் இங்கிலாந்தில் இது இரண்டு கட்டமாக பெருமளவு நில்ப்பரப்பினை உள்ளடக்கியதாக அமைந்தது. இதனுடைய பொருளாதார விளைவுகள் விரும்பத்தக்கதாக இருந்த போதும் சமூக விளைவுகள் விரும்பத் தக்கனவாக அமையவில்லை. முதலாவது கட்டத்தில் வளர்ந்து சென்ற உரோமத்திற்கான கேள்வியை நிரம்பல் செய்யும் நோக்குடன் மந்தை வளர்ப்பை விரைவுபடுத்தவும், இரண்டாவது கட்டத்தில் அதிகரித்த உணவுக் கேள்வியை நிரம்பல் செய்வதற்கு பேரளவு உற்பத்தியையும் புதிய தொழில் நுட்பங்களையும் புகுத்தும் நோக்குடனும் நில வடைப்பு இடம்பெற்றது. நிலங்களை ஒன்றிணைக்கும் முயற்சிக்கு அரசும் ஆதரவாக இருந்தது. இதனால் பல தொழிலாளர்கள் நிலங்களை விட்டு வெளியேறினர். சிறு நில விவசாய வர்க்கம் இல்லாதொழிந்து பிச்சைக்காரக் கூட்டம் இங்கிலாந்தின் நகர்ப் புறத்தில் விரைவாக வளர்ந்தது. அரசினது சுமையும் அதிகரித்தது. எனினும் நிலவடைப்பு இயக்கம் பொருளாதார ரீதியில் பெரு வெற்றியாகவும் மானிய பொருளாதார ரீதியில் பெரு வெற்றியாகவும் மானிய பொருளாதார அமைப்பின் வீழ்ச்சியை துரிதப்படுத்தியதாகவும் அமைந்தது.

பிரான்சினை நோக்கினால் மானிய முறையினால் கட்டுப்பட்டு, வரிகளினால் துன்பமுற்ற விவசாய மக்கள் மத்தியிலும், பொருட்களின் விலையுயர்வுக்கு ஏற்ற போதிய கூலி உயர்வு இல்லாமல் இடர்ப்பட்ட நகர்ப்புற தொழிலாளர் மத்தியிலும் ஏற்பட்ட அதிருப்தி புரட்சியொன்றை தோற்றுவிக்க வழிகோலியது. 1786ஆம் ஆண்டு உருவாகிய ''ஏடன்'' உடன்படிக்கை பிரான்சிய பொருளாதாரம் எதிர்பார்த்ததற்கு எதிரான விளைவுகளைக் கொண்டு வந்தது. பிரான்சில் கைத்தொழில் சீரழிவு ஏற்பட்டது. கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த கிராமிய மக்கள் வேலையிழந்து வருமானமின்றி அவதியுற்றனர். தானிய உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டதால் அரசாங்கம் தானியத்தை இறக்குமதி

செய்தது. இதனால் அரசாங்கத்தினது நிதி நிலைமை பாதிப்பிற்குள்ளாகியது. இதனைத் தொடர்ந்து பட்டினிச் சாவுகள் நகரங்கள் கிராமங்களில் அதிகரித்தது. இவையெல்லாம் மக்கள் புரட்சியொன்றை தோற்றுவிக்க வாய்ப்பை ஏற்படுத்தியது. மத்திய தர வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளர்கள், விவசாயிகள் அனைவரும் கூடி சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் என்ற தாரக மந்திரத்தை முன்வைத்தனர். ஆட்சி கவிழ்க்கப்பட்டு புதிய மக்களாட்சி தோற்றம் பெற்றதும் மானியப் பண்புகளின் அழிவுகள் துரிதப்படுத்தப்பட்டன.

ஜேர்மனி பிரான்சுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையினால் பிரான்சிய புரட்சியைப் பின்பற்றி ஜேர்மனியிலும் ஒரு புரட்சி வெடிக்கலாம் என அஞ்சி குடிமைகளை விடுதலை செய்யவும் அவர்களது சமூக பொருளாதார நிலையை முன்னேற்றவும் சட்டங்கள் இயற்றப்பட்டன. பிரான்சின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஜேர்மனியின் ஒரு சில மாகாணங்களிலும் குடிமை முறை ஒழிக்கப்பட்டது. பிரஷ்சியா பிரான்சுடனான யுத்தத்தில் தோற்றபோது ஜேர்மனியிலும் பின்தங்கியது உணர்த்தப்பட்டது. பொருளாதார முன்னேற்றத்திற்கு தனிமனித சுதந்திரம் தேவையென உணர்ந்து பிரஷ்சியா 1807இல் சட்டம் இயற்றியது. இதுவே குடிமை விடுதலையின் ஆரம்பமாகும். விடுதலைக்காகச் செலுத்தவேண்டிய நட்ட ஈட்டுத் தொகையைத் தீர்மானிப்பதில் பிரபுக்களுக்கும் குடிமைகளுக்குமிடையில் ஒரு கருத்தும் நிலவவில்லை. பின்னர் 1811ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி பரம்பரை உரிமையாளர் 1/3 பங்கு நிலத்தையும் ஏனையவர்கள் 1/2 பங்கு நிலத்தையும் நட்ட ஈடாகக் கொடுத்து விடுதலைபெற வாய்ப்பை ஏற்படுத்தியது. ஜேர்மனியின் கிழக்குப் பகுதியில் இருந்து விடுதலை பெற்ற குடிமைகளுக்கு இந்த ஏற்பாடு போதியளவு நிலத்தினைப் பெற்றுத்தரத் தவறிவிட்டது. எனவே ஜேர்மனியில் குடிமை விடுதலை ஊடாகச் சிறு நில விவசாயத்தைத் தோற்றுவிக்க முனைந்தவர்கள் தோல்விகண்டனர். அரசாங்க உதவியுடன் பணமாக நட்ட ஈட்டினைக் கொடுக்கவும் இப்பணத்தினை நீண்ட காலத்தில் திருப்பிக் கொடுக்கவும் வழிசெய்யப்பட்டது. 1850 களைத் தொடர்ந்து விடுதலை துரிதமாக்கப்பட்டதுடன் உற்பத்திப் பெருக்கமும் ஏற்பட்டது.

ரசியாவிலும் அடுத்தடுத்து வரையப்பட்ட சட்டங்களின் மூலமே குடிமைகளது விடுதலை துரிதமாக்கப்பட்டது. பிரான்சியப் புரட்சியைத் தொடர்ந்து ரசியாவின் மன்னர்கள் விழிப்புணர்ச்சி கொண்டிருந்தனர். 1803இல் சுதந்திரமான விவசாய வர்க்கம் உருவாகக்கூடிய வகையில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. 1820ஆம் ஆண்டில் இராணுவக் கிளர்ச்சியினால் குடிமைகளது விடுதலை பின்தள்ளப்பட்டது. 1853 — 70 காலப்பகுதியில் இடம்பெற்ற கிர்மிய யுத்தம் ரஷ்யாவின் குறைபாட்டினை பொருளாதாரப் பிற்போக்கு நிலையை போக்குவரத்து வசதியின்மையை எடுத்துக் காட்டியதுடன் கொடுமையான குடிமைமுறையே அடிப்படைக் காரணமென்பதையும் உணர்த்திற்று. 1861ஆம் ஆண்டு குடிமையொழிப்புச் சட்டம் சீர்திருத்தத்தினை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. நிலத்தினைப் பகிர்ந்து விவசாயிகளுக்கு வழங்குவதும் பிரபுக்களுக்கு நட்டஈடு வழங்குவதும் இதன் நோக்கமாகும். நட்ட ஈட்டுத் தொகையை வழங்க அரசாங்கம் நிதியுதவி வழங்கியது. இச்சட்டத்தின் மூலம் விவசாயிகளது நிலை

யில் மாற்றமேற்பட்டபோதும் மாற்றத்தினை உருவாக்கத் தோற்றுவிக்கப்பட்ட அமைப்புத் தடையாக விளங்கியது. எனினும் விவசாயத்தில் சந்தைக்காகவும் இலாபமீட்டவும் உற்பத்தி செய்தல் எனும் முதலாளித்துவக் கருத்துக்கள் வேரூன்றி விட்டன.

மானியமுறையிலான ஐரோப்பிய சமூகத்தினைக் குறிப்பாகப் பல நூற்றாண்டு பழமைவாய்ந்த மரபு, வழக்கம், கட்டுப்பாடு இவற்றினால் கட்டுண்டிருந்த சமூகத்தை நவீன முதலாளித்துவப் பொருளாதாரமாக மாற்றியமைப்பதில் மேற்கூறிய பொதுவான காரணங்களையும் நாட்டிற்கு நாடு சிறப்பாகச் செயல்பட்ட காரணிகளையும் இக்கட்டுரையில் எடுத்துக்காட்ட முயற்சிசெய்துள்ளேன். இவை இந்த மாற்றத்துக்குத் துணைநின்ற பிரதான காரணிகள் என்றே சொல்லலாம். இவைதான் இந்த மாற்றத்திற்குத் தூண்டுதலாக இருந்தது என்று எதனையும் குறித்துச்சொல்ல முடியாததும் இன்னகாலத்தில் இன்ன மாற்றம் நிகழ்ந்தது என்று கூறமுடியாத சிக்கல் இருப்பதையும் மனங்கொள்ள வேண்டும். சமூக பொருளாதார உருமாற்ற செயற்பாடொன்றினை அதுவும் மிகவும் நீண்டகாலம் இடம்பெற்றுவந்த மாற்றத்தினை அவ்வளவு சுலபமாக ஆராய முடியாது என்பதையும் மனதில் கொள்ளல் வேண்டும்.

## உசாத்துணை நூல்கள் :


1. **Pounds N. J. G.** — " An Economic Histor y of Modieval Europe ". London Longman Group London 1974.
2. **Heber man Leo** — Mans Worldly Goods The Story of wealth of Nations. Monthly Review Prers Newyork 1968.
3. **Heil broner L. Robert** — The Makvy of Economic Sovity second edition. Prentica Hall the Engleeood Cleffs New Jersey 1968.
4. **Knowles L. C. A.** — European Economic Development in 19th century Great Powers (Prance, Germany, Russia and The united status.) Augustus M. Kelley Publishers.
5. **Sowthgate Geoarge W.** — English Economics History. The New Edition J. M. Dent Ard Sms Hd Bedford St London W C2 1958.
6. **Shepard B. Clough, Richard T. Rapp** — European Economic History. The Economic Development of western civilization.
7. பேரின்பநாதன் ந. — பொருளாதார வரலாறு, 137 அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில், யாழ்ப்பாணம்,
8. சத்தியசீலன் ச. — ஐரோப்பிய மானிய சமுதாயம் பொருளியலாளன், மலர் 2, இதழ் 4, டிசம்பர் 1988.
9. செல்லப்பா கா. — சோவியத் பொருளாதாரம் சென்னை தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம். 1973

# அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் நகராக்கம்

பொ. அமிர்தலிங்கம், B A. (Cey )
( விரிவுரையாளர் புவியியற்துறை, பட்டப்படிப்புகள் கல்லூரி. )

கைத்தொழிற் புரட்சியின் பின்தான் நகராக்க செயல்முறை வளர்ச்சியடைந்தது எனக் கூறப்படுகின்றது. பொருளாதார அமைப்பில் உண்டான அடிப்படை மாற்றத்தினாலேயே இந்நகராக்கம் ஏற்பட்டது. அதாவது விவசாயப் பொருளாதார அமைப்பில் இருந்து கைத்தொழிற் பொருளாதார அமைப்பிற்கு பொருளாதாரம் மாற்றப்பட்டமையாலேயே இங்கு நகராக்கம் ஏற்பட்டது. கைத்தொழிற் புரட்சியினால் கிராமப்புறங்களில் பெருமளவிற்கு இயந்திரம் புகுத்தப்பட்டதனால் பெருந்தொகையான இளைஞர்கள் வேலை வாய்ப்பினை இழந்தனர். இதனால் கைத்தொழிற்சாலைகள் நிரம்பிய வேலைவாய்ப்புள்ள நகரங்களுக்குப் பெருந்தொகையானோர் இடம் பெயர்ந்தனர். நகரப்புற கைத்தொழிற்சாலைகளுக்கும் தொழிலாளர் தேவை இருந்தமையால் அவர்கள் கிராமப்புற வேலைவாய்ப்பிழந்த இளைஞர்களை கவர்ந்திழுத்தன. இதனாலேயே கைத்தொழிற் புரட்சியின் பின் மேற்கு ஐரோப்பாவில் உண்டான நகராக்கத்தினை '' **இழுவிசை நகராக்கம்** '' என்பர். கிராமப்புறங்கள் இளைஞர்கள் மத்தியில் வேலை வாய்பைப் பறித்தபோது நகரப்புறங்கள் வேலைவாய்ப்பை வழங்கின.

மேற்கைரோப்பிய நாடுகளில் உண்டான நகராக்க செயல்முறைக்கு மாறுபட்ட முறையில் அபிவிருத்தி அடைந்து வருகின்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நகராக்கம் ஏற்பட்டு வருகின்றது. அதாவது பொருளாதார அமைப்பில் அடிப்படையான மாற்றமில்லாமல் வேறு பல காரணங்களால் நகராக்கம் ஏற்பட்டு வருகிறது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரும்பாலானோர் விவசாயத்துறை சார்ந்தே உள்ளனர். எனினும் நகராக்கம் ஏற்பட்டு வருகிறது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் தற்போது பல்வேறு காரணங்களினால் நகராக்கம் உண்டாகி வருகின்றது. கிராமப்புற பிரச்சனைகளாலேயே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் முக்கியமாக நகராக்கமேற்படுகிறது. கிராமப்புறங்களில் போக்குவரத்து கஷ்டம், பயங்கரமான நோய், கல்வி வசதிக் குறைவு போன்ற காரணங்களால் அப்பகுதிகளில் இருக்க விரும்பாத மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி இடம் பெயர்கின்றனர். நகர்ப்புறங்களால் இவ்வசதிகள் சிறப்பாக அமைந்துள்ளதனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் கிராமப்புற மக்களை நகரங்களுக்குத் தள்ளுகின்றன. இதனாலேயே இந்நாடுகளின் நகராக்கத்தினை ''தள்ளுவிசை நகராக்கம்'' என்பர். இவ்வாறாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகராக்கம் ஏற்படுவதற்கான காரணங்களை நோக்குவோம்.

வர்த்தகப் போக்கில் காணப்பட்ட விரிவு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நகராக்கத்திற்குக் காரணமாயிற்று. வர்த்தக வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் நகரங்கள் முக்கியமாக வளர்ந்தன. நகரங்களில் உள்ள வர்த்தக வாய்ப்புக்களால் கிராமப்புற மக்கள் அந்நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர். பம்பாய், சங்காய், கொழும்பு ஆகியன வர்த்தக விருத்தியினால் வளர்ச்சியடைந்த நகரங்களாகும்.

பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் விருத்தியினாலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளால் பெருமளவிற்கு நகராக்கம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இந்நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டதின் பின் பல நகரங்கள் பெருந் தோட்டங்களை அண்டி உருவாகின. இலங்கையில் கம்பளை, நாவலப்பிட்டி, கற்றன், நுவரெலியா

ஆகியன பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை காரணமாக விருத்தியடைந்த நகரங்களாகும்.

இந்நாடுகளின் நகராக்க செயல்முறைகளில் ''கவர்ச்சி''யும் ஒன்றாகும். நகரப்புறங்களிலுள்ள கவர்ச்சி காரணமாகக் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள் நகர்ப்புறங்களை நோக்கி இடம்பெயர்கின்றனர். கவர்ச்சி என்ற அம்சம் பலகோணங்களில் கிராம மக்களைக் கவர்ந்துள்ளது. பொழுதுபோக்கு அம்சங்கள், நூலகவசதி, போக்குவரத்து வசதி, கல்வி வசதி போன்றன யாவும் கிராம மக்களைக் கவருகின்றன. இதனால் நகர்ப்புறங்களில் வாழ வேண்டும் என்ற உந்துதலினால் பெருந்தொகையானோர் நகரப்புறங்களுக்கு இடம்பெயர்கின்றனர்.

சிறந்த வைத்திய வசதியினை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகர்ப்புறங்களில் பெறக்கூடியதாக இருப்பதனால் நகர இறப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றன. இதனால் நகரப்புறங்களை நோக்கி மக்கள் செல்வதனால் அப்பகுதிகளில் மக்கள் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்காலத்தில் திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நகரங்கள் வளர்ச்சியடைகின்றன. பாகிஸ்தானில் இஸ்லாமபாத் என்ற நகரமும், இந்தியாவில் சந்திகார் என்ற நகரமும், பிறேசிலில் பிறேசிலீயா என்ற நகரமும் இலங்கையில் மினிப்பே, ஜயவர்த்தனபுர, அனுராதபுரம் போன்ற நகரங்களும் திட்டமிடப்பட்ட அடிப்படையில் வளர்ந்துவருகின்றன. இந்நகரங்களில் மக்கள் வாழ்க்கைக்கேற்ற வசதிகள் திட்டமிடப்பட்டு செய்தி கொடுக்கப்பட்டதனால் பிறபகுதியிலுள்ளவர்களும் இந் நகரங்களை நோக்கி இடம் பெயர்கின்றனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் காலனித்துவ நாடுகளாயிருந்த அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அவர்களுடைய ஆட்சிக் காலத்தின் போது மேலைத்தேய கல்வி முறையையும் பெற்றுக்கொண்டன. மேற்கு ஐரோப்பியரின் ஆட்சியின்போது சிறந்த கல்விக்கூடங்கள் முக்கியமாக நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டது. ஐரோப்பியரின் இக்கல்விக்கூடங்களில் கல்வி பெற்றவர்களே பிற்காலத்தில் அவ்வவ் நாட்டின் தேசியத் தலைவர்களாகவும், அரசியல், பொருளாதார – விஞ்ஞான துறைகளில் சிறந்து விளங்கியவர்களாகவும் வந்துள்ளனர். எனவே தாங்களும் அப்படிப்பட்ட கல்விக்கூடங்களில் கல்வி கற்கவேண்டும் என்ற அவாவினாலும் மக்கள் நகரப்புறம் நோக்கி நகரும்போது நகராக்கம் கூடுகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிலவுகின்ற சாதிப் பெறுமானத்தாலும் நகராக்கம் ஏற்பட்டு வருகிறது. இந்நாடுகளில் அந்நிய ஆட்சியின்கீழ் நகரப்புறங்களில் பெருமளவிற்கு சாதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டன. ஆனால் கிராமப்புறங்களில் இன்றுங்கூட சாதிக் கட்டுப்பாடு வேரூன்றியுள்ளன. இதனால் கிராமப்புறங்களில் சாதிக்கட்டுப்பாட்டை விரும்பாத மக்கள் நகரங்களை நோக்கி இடம்பெயர்கின்றனர். இது நகரமக்கள் தொகையைக் கூட்டுகின்றது.

மேற்கூறிய காரணங்களைவிட நகரம் நோக்கிய அகதிகளின் இடம் பெயர்வும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நகராக்கத்திற்கு இன்னோர் முக்கிய காரணமாகும். குறிப்பாக இன்று இலங்கையை எடுத்து நோக்கின் வடக்கு - கிழக்கு இனப்பிரச்சனை காரணமாக ஏராளமான மக்கள் கொழும்பு நகர் நோக்கியும் இடம் பெயர்ந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது,

**நகராக்கமும் அதனால் எழுந்துள்ள பிரச்சனைகளும் :**

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலே நகராக்கமும் அதனால் எழுந்துள்ள பிரச்சனையும் வெளிப்படையாகத் தெரிகின்றன. பொருளாதார அமைப்பில் அடிப்படையான மாற்றம் ஏற்படாமல் நகராக்கம் ஏற்படுவதே இந்நாடுகளில்

பெரும் நகராக்க பிரச்சினைக்குக் காரண மாகும். இந்நாடுகளின் நகராக்கத்துக்கு ஏற்ப நகர வளர்ச்சி இல்லாத ஒரு தன்மை யையும் அவதானிக்க முடியும். அதாவது நகரங்களின் குடித்தொகை அதிகரித்து வருகின்றபோதிலும் நகரத்தேவைகள் விரி வடையவில்லை. இதனாலே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நகரங்களில் பெரும் பிரச்சனை தோன்றியுள்ளது.

நகராக்கத்தினால் எழுந்துள்ள மிக முக்கிய பிரச்சினை வீட்டுப் பிரச்சினை யாகும். கிராமப்புறங்களிலிருந்து நகரங் களுக்கு மக்கள் தொகை அதிகரிப்பதற் கேற்ப நகரப்புறங்களில் வீடுகள் அதிகரிக்க வில்லை. இதனால் நகரப்புறங்களில் வாழ்க் கைக்குப் பொருத்தமற்ற வீடுகளிலும் வீதி யோரங்களிலும் மக்கள் வாழ்க்கை நடத்து கின்றனர். கொழும்பு நகரில் ஒவ்வொரு வருடமும் 16,280 புதிய வீடுகள் கட்டப் பட வேண்டிய நிலை உள்ளது. ஆனால் இது சாத்தியமான தொன்றாகக் காணப் படவில்லை.

நகராக்கத்தினால் எழுந்துள்ள மிக முக் கியமான பிரச்சனை சேரி வாழ்க்கையாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மட்டுமன்றி அபிவிருத்தி அடைந்த நாடு களிலும் கூட இப்பிரச்சனை தோன்றி யுள்ளது. நகரப்புறங்களில் உள்ள காணிப் பிரச்சனை, வீட்டுப்பிரச்சனை, தொழில் வாய்ப்பின்மை, வருமானக்குறைவு போன்ற காரணங்களால் சேரியில் வாழ்வோர் தொகை கூடிக்கொண்டு வருகின்றது. ஆபி ரிக்காவில் 1லட்சம் தொடக்கம் 5லட்சம் வரை சனத்தொகையைக் கொண்ட 44 நக ரங்கள் உள்ளன. ஒவ்வொரு நகரத்திலும் கிட்டத்தட்ட 66%தினர் சேரிகளில் வாழ் கின்றனர். லத்தீன் அமெரிக்காவில் 10லட் சத்திற்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்ட 15 நகரங்கள் இருக்கின்றன. இவற்றுள் 3 நகரங்களில் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் சேரியில் வாழ்கின்றனர். ஆசியாவில் 7 பிரதான நகரங்களில் 10 லட் சத்திற்கு மேற்பட்டோர் சேரிகளில் உள்ள னர். இவற்றில் 3 நகரங்கள் இந்தியாவில் உண்டு. இச்சேரி வாழ்க்கை தொடர்ந்து வேறு பல பிரச்சனைகளையும் தோற்று வித்துள்ளது. தொற்று நோய்கள், சமூக விரோத செயல்கள், போக்குவரத்து நெரி சல் போன்றவற்றுக்கும் இச்சேரி வாழ்க்கை காரணமாகிறது. இதனால் தான் நகராக் கத்தில் எழுந்துள்ள மிக முக்கிய பிரச் சனையாக சேரிவாழ்க்கை எடுத்துக் காட் டப்படுகிறது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நகராக்கத்தின் விளைவாக தோன்றியுள்ள இன்னுமோர் பிரச்சனை நகரபுறங்களில் இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி இருத் தலாகும். இதற்கு அடிப்படைக் காரணம் பொருளாதார அமைப்பில் அடிப்படை யான மாற்றமேற்படாமல் இந் நாடுகளில் நகராக்கம் கூடிவருதலாகும். அதாவது நகரப்புறங்களில் வேலை வாய்ப்பு அதிகரிக் காத வேளையில் கிராமப்புறங்களில் இருந்து நகரங்களை நோக்கி வேலை தேடிவருவோர் தொகை கூடி வருவதே. நகரப்புறங்களில் கைத்தொழிற்சாலைகள் அதிகரிக்காததால் இவ்விளைஞர்களுக்கு வழங்கக் கூடிய வகை யில் இந்நாடுகளில் நகரங்கள் காணப்பட வில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கக்கூடிய வகையில் தொழில் வாய்ப்பு அதிகரித்தமையால் இப்பிரச்சனை எழ வில்லை.

சமூகவிரோத குற்றச் செயல்களின் அதிகரிப்பும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நகரங்களில் கூடிவருகிறது. இதற்கு பிரதான காரணங்கள் இரண்டு. வீட்டு வசதி அதிகரிக்கப்படாமை, தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கப்படாமையுமே, வீட்டு வசதியின்மையால் வீதிகளை தங்கள் வாசஸ்தலங்களாக்கியுள்ள இந்நாடுகளின் சிறுவர்கள் இளம்வயதிலேயே துர்ப்பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டு வளர்ந்ததும் பயங்கரமான சமூவிரோத குற்றச்செயல் களுக்கு ஈடுபடுத்தப்படுகின்றனர். நகரப் புறங்களில் வேலை வாய்ப்பு இல்லாதிருக் கின்ற இளைஞரும் விரக்தி மனப்பான் மையால் இவ்வாறான சமூகவிரோத குற்றச் செயல்களுக்குட்படுகின்றனர்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வேகமான முறையில் அதிகரித்து வரும் நகராக்கம் இனக்கலவரங்களுக்கும் காலாக இருக்கின்றது. இந்நாடுகளில் நகராக்கத் திற்கேற்ப நகரவளர்ச்சி ஏற்படாததால் நகரப்புறங்களில் உள்ள வறியமக்கள் இன ரீதியாகத் தங்கள் பிரச்சனைகளை அணுக முற்படுகின்றனர். பம்பாயில் சிவசேனை இயக்கம் தமிழ்நாட்டு மக்களுக்கெதிராக நடத்திய தீவிரவாத நடவடிக்கையும் பிரச் சனையும் இதனையே காட்டுகிறது.

மேலும் இவற்றுடன் தொடர்பான வேறு பல பிரச்சனைகளும் நகராக்கத்தி னால் விளைந்துள்ளன. நகராக்கம் உண்டா வதற்கேற்ப போக்குவரத்துப் பாதைகளின் வளர்ச்சியோ, போக்குவரத்துச் சாதனங் களின் வளர்ச்சியோ காணப்படாதமை யினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட் டுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கான அனுமதியைப் பெறுவதும் இந்நாடுகளில் இயலாதுள்ளது. சுகாதாரம் அதிகளவிற்கு மாசுபடுத்தப்பட்டதாகவும் காணப்படுகின் றன. அடிக்கடி நீர்த்தட்டுப்பாடும், அவற் றுடன் மின்சார வெட்டும் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளில், நகரங்களில் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நகராக்கம் மேற்கைரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாக உள்ளது. இதற்கு அடிப்படையான காரணம் பொரு ளாதார அமைப்பில் அடிப்படையான மாற்றம் ஏற்படாமையே. இங்கு பொருளா தார அமைப்பில் அடிப்படை மாற்றம் என்பது விவசாயத்துறையை எந்திரமய மாக்கி பெருந்தொகையானோரை கைத் தொழிற் துறைக்கு கொண்டு வருவதனையே குறிக்கின்றது. ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இன்றுங்கூட பெருந்தொகையானோர் விவசாயத்துறை சார்ந்தேயுள்ளனர். நகராக்க குறைவிற்கு இன்னொரு காரணம் இந்நாடுகளின் நகரப் புறங்களில் காணப்படுகின்ற பிரச்சனை களாகும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடு களில் நகரங்களின் வாழ்க்கைச் செலவு உயர்வு, போக்குவரத்துக் கஷ்ரம், நீர்ப் பிரச்சனை இவைபோன்ற பல பிரச்சனை கள் காணப்படுவதனால் கிராமப்புறங்களில் இருந்து நகரப்புறங்களை நோக்கி மக்கள் இடம்பெயரத் தயங்குகின்றனர். மேலும் குடும்பப்பிணைப்பும் மக்கள் இடம்பெயர் வதை இந்நாடுகளில் குறைக்கின்றது. குறை வான வாழ்க்கைத்தரமும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நகராக்கத்தை குறைக்கின்றதெனலாம்.

**நகரப்பிரச்சனைக்கான சில ஆலோசனைகள் :**

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நகர்கள் பலவும் ஒத்ததன்மையான பல பிரச்சனைகளை எதிர்நோக்குவதால் பின் வரும் வழிமுறைகளினூடாக தீர்வுகளை செய்வதன் மூலம் நீண்ட கால அடிப் படையில் சில தீர்வுகள் ஏற்படலாம்.

1. நகர மையங்களில் மேலும் மேலும் குடியமுக்கமும் ஏற்படாமல் இருப் பதற்கு புறநகரங்கள் அல்லது ஏனைய மாவட்ட அல்லது நிர்வாக நகரங்கள் செறிவு ஏற்படத்தக்கவகையில் புற விவசாயத் துறை சார்ந்த நடவடிக் கைகளையும் தொடர்ந்து அனுமதித் தலோடு ஏனைய மத்திய நிலையங் களில் பொருளியல் ரீதியாக நியாய மென காணப்படுமிடத்து கைத்தொழி லுக்கும் தொழில் வாய்ப்புகளை ஏற் படுத்துவதற்குமான உயர் ஆமைப்பு களையும் ஏனைய வசதிகளையும் உரு வாக்குதல்.

2. பிரதான வளர்ச்சியடைந்த நகரங் களுக்கு அமைவாக மற்றொரு நகரின் வளர்ச்சியை முறையாக ஸ்தாபித்தல்.

3. பிரதான குடியமுக்கமுள்ள நகரங்களுக் கும், பதிலீட்டு நகரங்களுக்கும், துணை நகரங்களுக்கும் வளர்ச்சிச்சாலை ஒன்றை அமைத்தலும், அது பிரதான நகரத்துடன் இணைப்புப் பெற்றதாக இருக்கத்தக்க வகையில் சாலைகளை அமைக்குமிடத்து குடியமுக்கம் பன் முகப்படுத்தப்படுவதுடன் ஒரு மையத் தில் குவியாமலும் தடுக்கப்படலாம்.

4. நகரங்களில் சனத்தொகை அதிகமாவதற்கு இப்பிராந்தியங்களில் கிராம மட்டத்திலான வறுமை, நகர்நோக்கிய இடப்பெயர்வை தூண்டுவதனால் கிராமிய மையங்களில் வறுமை நீக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நகர உதிரி வருமானங்களை விட கிராமிய சராசரி வருமானம் உயர்நிலையில் இருக்கத்தக்கதாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

5. சேரிகள் ஒதுக்கிடங்கள் தன்னிச்சையாக வளர்ச்சியடைவது பெரிய நகரங்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையாகும். இவற்றைத் தீர்ப்பதற்கு இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கமுடியாது உள்ளது.

6. வாழிடங்கள், தரிப்பிடங்கள், சிறுவர் ஓய்வு - மனநிறைவு இடங்கள், பூங்காக்கள் என்பவை உட்பட ஏனைய பொதுநலப் பகுதிகள் விருத்தியடைதலும் இந்நகரங்களில் பிரச்சனைக்குரியதாக உள்ளது.

இவ்வாறாக, பெரும்பாலான நகர்ப் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் சுலபமாக கூறக்கூடியதாக இருப்பினும் நடைமுறையில் தீர்க்க முடியாமைக்கு அரசியல், பொருளாதார, சமூக பண்புகள் தடையாக உள்ளன. இவை ஏதோ வழியில் நீக்கப்பட்டாலன்றி நகரம் சார்ந்த பிரச்சனைகள் தொடர்ந்தும் அதிகரித்து வரும்.

# ஐ. நா. சபையும் அதன் சமாதானப் பணிகளும்

பொன். பூலோகசிங்கம் (விரிவுரையாளர்)

1945ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிரபல்யம் பெற்ற நகரமான சான்ஸ் பிரான்சிஸ்கோ நகரில் உதயமான ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் முதலாம் பந்தியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

" நமது வாழ்நாளில் மனித சமூகத்திற்கு இருமுறை அளவற்ற துன்பத்தை விளைவித்த யுத்தக் கொடுமைகளிலிருந்து இனிவரும் தலைமுறையைக் காப்பாற்றவும் அடிப்படை மனித உரிமைகளைப் பேணிச் சமத்துவத்தை வளர்க்கவும் மனித சமூக முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தவும் சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பேணிக் காப்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை என்ற இந்த உலக சமாதான சபை தோற்றுவிக்கப்படுகிறது "

மேலே கூறப்பட்ட கருத்தை மகுடவாசகமாகக் கொண்டு ஐக்கிய நாடு சபை தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வாறான உலகளாவிய ஓர் சமாதானசபை ஒன்றின் உருவாக்கத்தின் பின்புலத்தை ஆராய்தல் பொருத்தமானதாகும்.

மனித சமூகத்தில் சித்தனையாளர்கள் தோன்றி அறிவு வளர்ச்சி பெற்ற காலம் தொடக்கம் காலத்திற்குக்காலம் பல்வேறு அறிஞர்கள் தோன்றிவீணான யுத்தங்களால் ஏற்படும் அவலங்களையும் அழிவுகளையும் எடுத்துணர்த்தி சமாதானத்தின் அவசியத்தையும் அவற்றைப் பேண சமாதான சபைகளை அமைக்க வேண்டியதன் அத்தியாவசியத்தையும் எடுத்துரைத்து வந்துள்ளார்கள்.

1675ஆம் ஆண்டு சர்வதேச சட்டத்தின் தந்தை என வர்ணிக்கப்படும் குரோசியல் என்ற அறிஞர் தான் எழுதிய சமாதான கால சட்டங்கள் என்ற நூலிலும் 1713ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டு அரசாங்கம் வெளியிட்ட ஒரு நூலிலும் 1761ஆம் ஆண்டு தத்துவமேதை ரூசோ அவர்கள் வெளியிட்ட ஐரோப்பிய சமஷ்டி-பற்றிய நூலிலும் முதலில் சர்வதேச சமாதான சபை ஒன்றின் அவசியம் பற்றி எடுத்துரைத்தனர்.

இதன்பின்னர் ஆங்கில நாட்டு தத்துவமேதை ஜெரமி பெந்தம் என்பவர் சர்வதேச சமாதானத்திற்கான திட்டம் ஒன்றை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து 1785ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டு தத்துவமேதை இம்மானுவல் காண்ட் என்பவர் எழுதிய நூல் ஒன்றிலும் நிரந்தர சர்வதேச சமாதான திட்டம் ஒன்று வெளியிடப்பட்டது.

இவ்வாறாகக் காலத்திற்குக் காலம் சமாதான திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டபோதும் அவை செயல் வடிவம் பெறவில்லை. முதலாம் உலகமகாயுத்தத்தின் போதுதான் உலகநாடுகள் பலவும் சர்வதேச சமாதானசபை ஒன்றின் அவசியத்தை உணர்ந்தனர். இதனால் முதலாவது உலகமாகயுத்தம் முடிந்த கையோடு 1919ஆம் ஆண்டு உலக நாடுகள் பலவும் சேர்ந்து சர்வதேச சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்கள். ஆனால் சமாதானத்தை நோக்கிய பயணத்தில் சர்வதேச சங்கம் தோல்வியைத் தழுவியது. இதனால் இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமானது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட துன்பியல் நிகழ்வுகளும் அதன் அடிப்படையிலான கசப்பான அனுபவங்களும் ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்திற்கு வழிகோலின். இந்த வகையில் உதயமான ஐக்கிய நாடுகள் சபை தனது கடமைகளை நிறைவேற்றுமுகமாக தனது செயற்பாடுகளை, குறித்த இலக்கு நோக்கி நகர்த்து முகமாகவும் மூன்று விதமான செயற்பாடுகளை வகுத்துக் கொண்டுள்ளது.

முதலாவது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் பெரிய நாடுகள் - சிறிய நாடுகள் என்றும் அபிவிருத்தியடைந்த நாடுகள் - குறைவிருத்தி நாடுகள் என்றும் பேதமின்றி ஒன்றாகக் கூட்டாக அமர்ந்து தமக்கிடையேயான பிரச்சினைகளைக் கலந்து பேசி விவாதித்துத் தீர்த்துக் கொள்ள வழிசமைத்தல்.

இரண்டாவது, ஐக்கிய நாடுகள் சபையானது நாடுகளுக்கிடையில் தகராறுகள் ஏற்படுகின்றபோது அவற்றை இராஜதந்திர அடிப்படையில் அணுகித் தீர்த்து வைக்க முயற்சித்தல் வேண்டும். அது சாத்தியமாகாத விடத்து உறுப்பு நாடுகளிலிருந்து திரட்டப்பட்ட அமைதிப்படையை அனுப்பி அங்கு சமாதானத்தை நிலைநாட்ட முயற்சிக்க வேண்டும்.

மூன்றவதாக, உலகம் பூராவும் உள்ள மக்களின் சமூக பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு உழைத்தல் வேண்டும்.

மேலே கூறப்பட்ட இலக்கை நிறைவு செய்யு முகமாக ஐக்கிய நாடுகள் சபையானது பல்வேறு உப அமைப்புக்களை உருவாக்கியுள்ளது.

உலகில் அமைதியை ஏற்படுத்தவும் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபை இதுவரை மேற் கொண்ட நடவடிக்கைகள் யாவை? அவை எவ்வளவு தூரம் வெற்றியளித்தன என்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன.

1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் முதல் இருபது ஆண்டுகள் வரை உலக நாடுகள் மத்தியில் ஏற்பட்ட முரண்பட்ட கருத்துக்களுக்கு மத்தியில் ஒரு சமரசத்தைக் காண்பதில் அது கணிசமானளவு வெற்றி பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்ட பின்னர் அது எதிர் நோக்கிய முதல் பிரச்சினை கொரிய பிரச்சினையாகும். இப்பிரச்சினைக்கு தீர்வு காணுமுகமாக தனது படைகளை அங்கு அனுப்புவதென்ற தீர்மானத்தை அது எடுத்தது.

இதேபோல 1956ஆம் ஆண்டு சுயெஸ் கால்வாய் பிரச்சினையில் பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரவேல் ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக இணைந்து எகிப்து மீது தாக்குதல்களைத் தொடங்கின. இக்கால கட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் காரியதரிசியாக விருந்த டாக் ஹமர்ஹீல்ட் அவர்கள் ஆற்றிய இராஜதந்திர பணிகளின் காரணமாக எகிப்துக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான காஸா பகுதியில் சமாதானத்தைப் பாதுகாக்க வரலாற்றிலேயே முதலாவது எல்லைக் காவல்படை அமைப்பதில் ஐக்கிய நாடுகள் சபை வெற்றி பெற்றது.

இதன் பின்னர் 1957ஆம் ஆன்டு இடம் பெற்ற ஹங்கேரி மீதான சோவியத்தின் இராணுவத்தலையீடு, 1958இல் ஏற்பட்ட லெபனான் நெருக்கடி, 1960ஆம் ஆண்டு ஏற்பட்ட கொங்கோ பிரச்சினை, 1961ஆம் ஆண்டு ஏற்பட்ட கியூபா பிரச்சினை 1964இல் ஏற்பட்ட சைப்பிரஸ் நெருக்கடி, 1965ஆம் ஆண்டு ஏற்பட்ட டொமினிக்கன் குடியரசுப் பிரச்சனை போன்ற பல பிரச்சினைகள் ஐ. நா. சபை எதிர்நோக்கிய வேறு சில நெருக்கடிகளாகும்.

இதேவேளையில் மத்திய கிழக்குப் பிரச்சினையிலும் காஸ்மீர் நெருக்கடியிலும் சைப்பிரஸ் பிரச்சினையிலும் ஐக்கிய

நாடுகள் சபை இன்னமும் ஒரு தீர்க்கமான முடிவைக் காணவில்லை என்ற குற்றச் சாட்டும் உள்ளது.

*1991*இல் ஏற்பட்ட குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்புப்போரிலும் அதன் பின்னர் இடம் பெற்ற ஈராக்- நேசநாடுகள் போர் மற்றும் இன்றைய பொஸ்னிய பிரச் சினை, சோமாலிய நெருக்கடி, ஹெயிட்டி தீவில் ஏற்பட்ட முறுவல் நிலைமை எல்லா வற்றிலும் அமெரிக்க தலையீடு நேரடியா கவோ அல்லது மறைமுகமாகவோ இருக் கின்றமையும் இவை தொடர்பான முன் மொழிவுகளையெல்லாம் மேற்கொள்வதில் ஐக்கிய நாடுகள் சபையை அமெரிக்காவே வழி நடத்துகின்றது என்ற குற்றச்சாட்டும் ஐக்கிய நாடுகள் சபைமீது போடப்பட் டுள்ளன.

அடுத்ததாக உலகின் பல பாகங்களிலும் இடம்பெற்று வரும் இனப்படுகொலைகள் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபை எவ்வித அக்கறையுமின்றி பாராமுகமாக இருந்து வருவதாகவும் தேசிய இனங்களுக்கிடையி லான முரண்பாடுகள் முற்றி அவை விடு தலைப் போராட்டங்கருக்கு வழிவகுத்த போது அவற்றிற்கு நியாய பூர்வமான தீர் வுகளை முன்வைக்காமல் உள்நாட்டுப் பிரச் சினைகள் என முலாம் பூசி தனது பங்களிப் பினின்றும் தட்டிக்கழித்து வருவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் கடந்த **48** ஆண்டுகால சாதனைகளை மதிப்பீடு செய்பவர்கள் மூன்றாவது உலகமகாயுத்தம் ஒன்று ஏற்படாமல் ஐக்கிய நாடுகள் சபை உலகைக் காப்பாற்றியுள்ளது என மதிப்பீடு செய்துள்ளார்கள். ஆனால் இரண்டு உலகப் போரின் போது மடிந்த மக்களது எண்ணிக் கையிலும் பார்க்க அதன் பின்னர் ஏற் பட்ட யுத்தங்களில் பெருமளவு எண்ணிக் கையான மக்கள் மாண்டு போனார்கள் என்ற வரலாற்றாசிரியர்களது வாதங் களையும் மறுக்க முடியாது. அந்த வகை யில் ஐக்கிய நாடுகள் சபையின் பணிகள் ஒரு வாளின் மேல் நின்று செய்யும் மாத வம் போல்தான் உள்ளது.

# கானல்வரி ஒரு திருப்பு மையம்

பொ. அருந்தவநாதன், B. A. (Hons)

கானல்வரி சிலப்பதிகாரத்தில் ஏழாவது காதையாய் அமைகின்றது. சிலப்பதிகாரம் இசைப்பாக்கள் கலந்து வருகின்ற நாடகக்காப்பியம். கானல் எனப்படுவது கடற்கரைச் சோலை. இசைப் பாடல்களானவை வரிப்பாடல்கள். சிலப்பதிகாரத்தின் இசைச் சுவையை வளம்படுத்துவது இக் கானல் வரியாகும். இக் காதையிலே ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில்வரி, கானல்வரி, நிலைவரி, முரிவரி, திணை நிலைவரி, மயங்குதிணைநிலைவரி, சாயல் வரி எனும் பிரிவுகளிலே வரிப்பாடல்கள் அமைந்திருக்கின்றன. இந்த வரிப்பாடல்களைக் கோவலன் யாழிலே இசைக்க, அந்த யாழோடு தன் குயிற்குரல் சேர்த்து மாதவி பாடினாள். கலையாசை மிக்க இந்த இருவரால் கடலோசை மிக்க கரையிலே இசைக்கப்பட்ட பாடல்களே கானல் வரிகளாகின்றன.

மனித வாழ்க்கையில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் தோன்றிமறைகின்றன. ஆனால் சில நிகழ்ச்சிகள் மட்டுமே அவன் எண்ணத்தில் நிலைத்து நிற்கின்றன; சில நிகழ்ச்சிகள் மட்டுமே அவன் வாழ்க்கையைத் திசை திருப்புகின்றன. இந்தவகையில் திருப்பங்களைப் பெற்று அமைகின்ற காப்பியங்களிலே சிலப்பதிகாரத்திலே கானல் வரி ஒரு திருப்பமாக அமைகின்றது.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மூன்று உண்மைகளை எடுத்துரைக்க வருகின்றார். இந்த மூன்று உண்மைகளையும் நிலைநிறுத்தக் கோவலன் வாழ்விலே ஒரு திருப்பத்தை உருவாக்குகிறார் அடிகள். முதலாவது உண்மை, ஊழ்வினை உருத்து வந்து உளட்டும் என்பது. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்பது அடுத்த உண்மையாகும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பது மூன்றாவதாக அமையும் உண்மை. கோவலனின் கொலையோடு ஊழ்வினை உறுத்து வந்து நிறைவு பெறுகிறது. இந்தக் கொலையே அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும் எனும் அடுத்த உண்மையையும் பூர்த்தியாக்குகின்றது. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவதற்கும் இதுவே அடிப்படையாகிறது. ஆகவே இந்த மூன்றுக்கும் காரணமாக ஒரு திருப்பம் தேவைப்பட்டது.

காரணமின்றி ஒருவனைக் கொன்ற பழியை ஏற்றவன் கோவலன். இது முற்பிறப்பில் நிகழ்ந்தது. அந்தப் பழியின் பயனை ஏற்குமாறு ஊழ்அவனுக்கு ஆணையிட்டது. எனவேதான் அவன் பிறந்த இடத்திலிருந்து அவனை இயக்குவதற்காகக் காப்பியத்திலே கானல்வரி அமைந்தது. ''யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துருத்ததாகலின்'' என இதைத்தான் ஆசிரியர் கானல்வரியில் குறிப்பிடுகிறார். கலையுணர்வார் ஒத்தனர் இருவர். அவ்வுணர்வே அவர்களைப் பிரிக்கவும் செய்தது. இதுவே ஊழ்வினையாகவும் மாறியது.

காப்பியத்தில் அமைந்திருக்கும் ஐந்து கூறுகளில் பிரதி முகம் என்பது திருப்பு மையமாகிறது. சிலப்பதிகாரத்திலே கானல் வரியிலே தோன்றிய காதலன் மாற்றம் காப்பியத்தைத் திசை திருப்புகிறது. ஆடல், பாடல், அழகு மூன்றாலும் கோவலனைத் தன்வயப்படுத்தும் மாதவி கோவலனோடு சேர்ந்திருந்த காலம் ஏறத்தாழப் பன்னிரண்டாண்டுகள் மாதவிக்கு அடிமையான கோவலனால் மணிமேகலை எனும் பெண்பிள்ளையும் மாதவிக்குப் பிறக்கிறாள். கண்ணகிக்கு இல்லாத பெருமையைப் பெற்ற மாதவியைக் கோவலன் ஏன் பிரிய வேண்டும். இந்த வினாக்களுக்கு விடை தரும் பகுதியே சிலப்பதிகாரத்தில் கானல் வரியாகும்.

கடலாடு காதையில் இந்திர விழாவின் போது மாதவி பதினோராடல்களை ஆடு கிறாள். இந்தச் சந்தர்ப்பத்திலே கோவ லனின் ஊடல் மாதவியுடன் இருந்தது எனும் செய்தியும் ஆசிரியரால் கூறப்படு கிறது. அவனைத் தன்வசப்படுத்த கூந்தல் நெய் பூசிப் புகையூட்டி ஒப்பனைகள் மேவி கடலாட விழைந்த மாதவிக்குக் கோவல னைக் குளிரவைக்கும் ஆர்வம் எண்ணத் தில் இழையோடுகிறது. மாதவி கோவல னுக்கு யாழை அளிக்கிறாள். கோவலன் இசைக்கிறான்.

சோழன் காவிரிக்குத் தலைவனாக இருக்கிறான். அவன் வடநாட்டுக்குச் சென்று. வெற்றி பெற்று கங்கையுடன் தொடர்புறுகிறரன். அதனால் காவிரியா னவள் கோபம் கொள்ளவில்லை. தெற் கிலே குமரி நதியுடன் உறவுறுகின்றான். அதற்கும் அவள் ஊடவில்லை. கோவலன் பாட்டில் தோன்றிய கருத்து இது. கண வன் பிற பெண்களை நாடினும் கோபிக் காத குணநலமுள்ளவளான கண்ணகியை நினைத்துக் கோவலனாலே பாடப்பட்ட பாடல்

**திங்கள் மாலை வெண்குடையின் சென்னிச்-**
**செங்கோல் அதுவோச்சிக்**
**கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய்-**
**வாழி காவேரி**
**கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவர்-**
**தொழிதல் கயற்கண்ணாய்**
**மங்கை மாதர் பெருங்கற்பென்று அறிந்தேன்**
**வாழி காவேரி**

இந்தப்பாடலுக்கு மாதவி கொள்கின்ற பொருள் வேறாக அமைகின்றது. மாத வியும் சோழனாகக் கோவலனைக் கருது கிறாள் காவிரியாகத் தன்னைக் கருது கிறாள். கங்கையைக் கன்னியைக் கோவலன் தொடபுர் கொண்ட வேறு பெண்களாகக் கருதி காவிரிபோல் தான் ஊடாமல் இருக்க வேண்டும் எனக் கோவலன் எதிர் பார்ப்பதாகக் கருதுகிறாள். அவளும் ஆற் றுவரிப் பாடல்களைப் பாடுகின்றாள். கோவலனைப் போலவே காவிரியின் சிறப் புக்களைப் பாடுகின்றாள். தனது கணவ னின் வீரத்திலும் ஆண்மையிலும் தான் காவிரியே பெருமை கொள்கிறாள் என்று கருதுகிறாள். சூரியக் கதிர்கள் பார்க்க முடியாத இருளடர்ந்த சோலையில் வேனிற் காலத்தில் குயில்கள் பாடுகின்றன. வெயிலே படாத சோலையில் நுழைந்த மயில் சோலையின் இருளே மேகமாய்க் கண்டு ஆடுகின்றது. வேனிற்காலத்தில் ஆடமுடி யாத மயிலின் ஆட்டம் இது. இப்படி, மாத வியின் பாடலில் மயில் ஆட, குயில் பாட ஒரு கலையின் கதம்பத்தைக் காணமுடி கிறது. கோவலன் பாடலோ கற்பின் பெரு மையைக் கூறுகிறது.

சார்த்துவரிப் பாடல்கள் இருவராலும் பாடப்படுகின்றன. கோவலன் பாடல்கள் ஒரு தலைவி, தோழி கூற்றாகவே அமை கின்றன. அதிலும் கண்ணகி ஞாபகமும அவனுக்கு. தனது வருகைக்காகக் காத்து நிற்கும் அவளது எழில் வதனமே அவன் மனக்கண்ணுக்குத் தெரிகின்றது. வண்டாக மாறி நிற்கும் கோவலன் இயற்கையாகி நிற்கும் கண்ணகி, செயற்கையாகி நிற்கும் மாதவி என்பவர்களுள் இயற்கை, செற்கை தெரியாது தடுமாறி நிற்கின்றான்.

**காதலராகிக் கழிக்கானல் கையுறை**
**கொண்டு எம்பின் வந்தார்**
**ஏதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதை**
**யாங்கறி கோமைய**
**மாதரார் கண்ணும் மதிநிழல் நீரிணை**
**கொண்டு மலர்ந்த நீலப்**
**போதுமறியாது வண்டு சலாடும்**
**புகாரே எம்மூர்.**

பொய்கையில் நீல மலர்கள் மலர்ந்திருக்கும் நிலவுக் காலம்; நிலவின் நிழற்கோலம். நீரில் இரு நீலமலர்கள், அங்கே நீராடும் பெண்களின் நிலவு வதனத்தில் நீலக்கண்கள். இது பொய்கையில் மலர்களில் தேனுண்ண விழையும் வண்டுக்கு மலரெது, மங்கை விழி எது எனும் மயக்கத்தைத் தருகிறது. இதே வண்டாகத்தான் கோவலன் மாறிநிற்கின்றான். கோவலன் கண்ணகியை நினைத்துப் பாட மாதவி அவன் வேறொரு பெண்மேல் காதல் கொண்டதாகக் கருதுகின்றாள். இதனால் அவள் பாடும் எதிர்ப்பாடல்கள் ஒரு தலைவனை நினைத்துப்பாடும் முறையில் அமைகின்றன.

**தம்முடைய தண்ணளியும்**
**தாமும் தம் மான்றேரும்**
**எம்மை நினையாது விட்டாரோ**
**விட்டகல்க**
**அம்மென் இணர அடும்புகாள்**
**அன்னங்காள்**

**நம்மை மறந்தாரை நாம்**
**மறக்க மாட்டேமால்.**

கோவலன் பக்கத்திலிருக்கையிலே அவனது பாடல்கள் தந்த அச்சம் அவன் தன் நெஞ்சத்தை விட்டு விலகுவதாக அவளுக்குத் தோன்றுகிறது. அதன் பதிலே நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோமா என்பது.

மாதவியின் பாடல்கள் கண்ணகி நினைவிலிருந்த கோவலனுக்கு மேலும் மேலும் தூண்டுதலாகின. கலையால் ஒன்றான இரு காதல் உள்ளங்கள் கானல் இசையால் இருவேறு திக்குகளாகிப் போகின்றன. கோவலன் மாதவி பிரிவுக்கு அவர்கள் இருவரது புரிந்துணர்வில்லாத மனப்போக்கே காரணமாகிறது.

சிலப்பதிகாரத்தில் பின்னாலே ஏற்படப்போகின்ற காப்பிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் திருப்புமையமாகக் கானல்வரி அமைகிறது.

# நுகர்வோர் சந்தையும் கைத்தொழிலாளர் சந்தையும்

தேவராஜன் ஜெயராமன் B. com (Hons) MBA (Delhi) AMIPM (Sri Lanka)
*(விரிவுரையாளர் வணிக முகாமைத்துவதுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)*

## 1.1 அறிமுகம் :

சந்தை என்றால் என்ன? சந்தை என்ற சொல் பலவேறு சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வெவ்வேறு கருத்துக்களை வழங்குவதும் உண்டு. சந்தை (Market) என்னும் போது கொள்வனவாளர்களும், விற்பனையாளாகளும் சந்திக்கும் இடத்தினைக் குறிக்கும். சந்தை என்னும் போது குறிப்பிட்ட பொருள் அல்லது சேவைக்கு கொள்வனவாளரால் ஏற்படுத்தப்படும் கேள்வியினைக் குறிப்பதும் உண்டு. சந்தை (Market) கேள்வி (Demand) ஆகிய இரு பதங்களும் ஒன்றுக்குப் பதிலாக ஒன்று பிரயோகிக்கப்படுவதும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் இவ் இரண்டு பதங்களும் இணைந்து சந்தைக்கேள்வி (Market Demand) என்ற பதமாக பயன்படுத்தப்படுவதும் உண்டு. சந்தை என்னும் போது வாங்குவோரைக் குறிப்பதும் உண்டு. இக்கட்டுரையில் சந்தை என்ற பதம் வாங்குவோரைக் குறிக்கின்றது. சந்தை என்னும் போது மக்களைக் கொண்டது. அவர்கள் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருப்பர்.

(அ) விருப்பம் தேவைகளைக் கொண்டிருப்பர்

(ஆ) செலவு செய்வதற்கு பணத்தினைக் கொண்டிருப்பர்.

(இ) செலவு செய்வதற்கான விருப்பத்தினைக் கொண்டிருப்பர்.

மேற்குறிப்பிட்ட மூன்று அம்சங்களையும் வாங்குவோர் கொண்டிருப்பர்.

இக்கட்டுரை மூலம் நுகர்வோர் சந்தைக்கும். கைத்தொழிலாளர் சந்தைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் பற்றி ஆராயப்படவுள்ளது.

## 1.2 நுகர்வோர் சந்தை கைத்தொழிலாளர் சந்தை
**(Consumer Market - Industrial Market)**

நுகர்வோர் என்றால் யார்? சொந்தப் பாவனைக்காக பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்பவர்களை நுகர்வோர் என அழைக்கலாம் இவர்களை இறுதிப் பாவனையாளர் (Enduser) எனப் பெயர் கொண்டு அழைக்கப்படுவதும் உண்டு. சொந்தப் பாவனைக்காக பொருட்களைக் கொள்வனவு செய்யும் தனிப்பட்டவர்களும் (Indiriduals) வீட்டுத்துறையினரும் (Households) இவ் சந்தையில் உள்ளடக்கப்படுவர் நுகர்வோர் சந்தையில், நுகர்வோரால் திடமற்ற பொருட்கள் (Non Durable Goods) திடமான பொருட்கள் (Durable Godso) சேவைகள் (Services) என்பன கொள்வனவு செய்யப்படும்.

உற்பத்திக்காக அல்லது விற்பனை நோக்கம் கருதி பொருட்களைக் கொள்வனவு செய்பவர்களை உள்ளடக்கிய சந்தை கைத்தொழிலாளர் சந்தை என அழைக்கப்படும் இவ் கைத்தொழிலாளர் சந்தையில் தனிப்பட்டவர்களும் (Indiriduals) நிறுவனங்களும் (Organisations) காணப்படும்.

கைத்தொழிலாளர் சந்தையில் முதலீட்டுப் பொருட்கள், உற்பத்திக்கான மூலப் பொருள்கள், சேவைகள் என்பன கொள்வனவு செய்யப்படும்.

நுகர்வோர் சந்தைக்கும் கைக்தொழிலாளர் சந்தைக்கும் இடையே சில குறிப் பிடத்தக்க வேறுபாடுகளை அவதானிக்கமுடியும். இவ் இரண்டு வகையான சந்தை களையும் பின்வரும் அம்சங்களின அடிப்படையில் வேறுபடுத்தமுடியும்.

(அ) கேள்வியின் வகை (Type of Demand)
(ஆ) பொருளின் வகை (Type of Product)
(இ) பொருளின் பாவனை (Use of Product)
(ஈ) வாங்குவோரின் வகை (Type of Buyer)
(உ) வாங்குவோரின் எண்ணிக்கை (Number of Ruyers)
(ஊ) கொள்வனவு செய்யும் இடம் (Place of Purchase)
(எ) கொள்வனவு செய்வது தொடர்பான நிபந்தனை (Terms and Conditions of Purchase)

மேற்குறிப்பிட்ட ஏழு அம்சங்களின் அடிப்படையில் நுகர்வோர் சந்தையும் கைத் தொழிலாளர் சந்தையும் எவ்வாறு வேறுபடுகின்றது என ஆராய்வோம்.

கைத்தொழிலாளர் சந்தையில் பொருட்களுக்கான கேள்வி வழிவந்த கேள்வியாகக் காணப்படும். உற்பத்தி செய்முறையில் உள்ளீடாக பயன்படுத்தும் பொருட்டு பொருட்கள் அல்லது சேவைகள் கொள்வனவு செய்யப்படும். இது இன்னொரு நுகர் வோருக்கு வினியோகிக்கப்படும். இவ்நுகர்வோர், நுகர்வோர் சந்தையில் காணப்படும் ஒரு தனிப்பட்டவராகவோ அன்றி இன்னொரு கைத்தொழில் நுகர்வோராகவே (Industrial Customer) காணப்படலாம்.

நுகர்வோர் சந்தையில் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் அடிக்கடி கொள் வனவு செய்யப்படும் அத்துடன் கொள்வனவு செய்யப்படும் அளவு (Size) சிறிதாகக் காணப்படும். கொள்வனவு தொடர்பான கொடுக்கல் வாங்கலின் பெறுமதியும் குறை வாக இருக்கும். ஆனால் கைத்தொழிலாளர் சந்தையில் கொள்வனவு அடிக்கடி மேற் கொள்ளப்படுவதில்லை. ஆனால் கட்டளையின் அளவு, பெறுமதி என்பன மிக உயர் வானதாகக் காணப்படும்.

நுகர்வோர் சந்தையில் கூடுதலான அளவு கொள்வனவாளர் காணப்படுவார்கள் கைத்தொழிலாளர் சந்தையில் குறைவான அளவு கொள்வனவாளர் காணப்படுவார்கள். கைத்தொழிலாளர் சந்தையில் கொள்வனவு தொடர்பான தீர்மானம் தொழில் நுட் பம், பொருளாதாரக் காரணிகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும். செலவு மதிப்பீடு விற்பனை எதிர்வு கூறல் தொழில் நுட்பக்காரணிகள் என்பன கொள்வனவு தொடர்பான தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனால் நுகர்வோர் சந்தையில் அவ்வாறில்லை.

கைத்தொழிலாளர் சந்தையில் ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன ரீதியான ஒரு கொள் வனவு முறை காணப்படும் ஏனெனில் கைத்தொழிலாளர் சந்தையில் நிறுவனங்கள் கொள்வனவில் ஈடுபடுகின்றன. அத்துடன் கொள்வனவின்போது ஒழுங்கமைக்கப்பட்ட கொள்வனவு நடைமுறைகள் பேணப்படும்.

நுகர்வோர் சந்தையில் கொடுப்பனவுகள் பொதுவாக காசாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் உடனடியாக அல்லது விநியோகத்தின் போது மேற்கொள்ளப்படும். கைத்தொழிலாளர் சந்தையில் கொடுப்பனவுகள் தொடர்பாக கடன்வசதி மேற்கொள் ளப்படும். அத்துடன் கொடுப்பனவு தொடர்பாக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும். அதன் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

நுகர்வோர் சந்தையில் விளம்பரம், மேம்படுத்தல் தொடர்பாக தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, சஞ்சிகை, துண்டுப்பிரசுரம், கூப்பன்கள் போன்ற முறைகள் பயன்படுத்தப்படும். கைத்தொழிலாளர் சந்தையில் விளம்பரம் மேம்படுத்தல் தொடர் பாக பொருட்காட்சி, தொழில்நுட்ப மகாநாடுகள், விற்பனைக் கையேடுகள் என்பன பயன்படுத்தப்படும். இதனால் நுகர்வோர் சந்தையில் விளம்பரம் தொடர்பான முக் கியத்துவம் அதிகம். கைத்தொழிலாளர் சந்தையில் இதன் முக்கியத்துவம் குறைவு.

முடிவுரை:

இவ்வாறு நுகர்வோர் சந்தை, கைத்தொழிலாளர் சந்தை என்பன மேற்குறிப் பிட்ட அம்சங்களில் வேறுபடுவதனை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான வேறுபா டுகளை விளங்கிக் கொள்வதன்மூலம் பொருட்கள் சேவைகளைச் சந்தைப்படுத்துவோர் வெவ்வேறு சந்தைகளுக்கு ஏற்றதாக சந்தைப்படுத்தல் கொள்கைகள் தந்திரோபாயங் களை உருவாக்க முடியும்.

***உசாத்துணை நூல்கள்:***

1. தேவராஜன் ஜெயராமன் — *வர்த்தகமும் நிதியும் அலகு (1) (1990)*
2. **Philipkotber** — ''Marketing Management *(1989)*

# இந்து நாகரிகத்திற் குப்தர் காலம் ( கி. பி. 320 - 600 )

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
( சிரேஷ்ட விரிவுரையாளர் ஆசிரியர் கலாசாலை கோப்பாய் )

இந்திய வரலாற்றில் வரலாற்றிற்கு முற்பட்ட காலம் எனச் சிந்துவெளியைக் கூறுவர். அதனையடுத்து வேதகாலம் இடம்பெறுகின்றது. வேதகாலத்தின் பின்னர் உபநிடதங்களும் ஸ்மிருதி நூல்களும் அவற்றையடுத்து இதிகாச புராணங்களும் தோன்றின. கி. மு. 6ஆம் நூற்றாண்டளவில் சமண, பௌத்த மதங்கள் இந்தியாவில் தோன்றிப் பரவத் தொடங்கின. அசோகனுடைய ஆட்சியில் பௌத்தமதம் வேகமாகப் பரவத் தொடங்கியது. அசோகனுடைய ஆட்சிக் காலம் இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றது. அசோகனுடைய கல்வெட்டுகள், அவன் அமைத்த தூண்கள், தூபிகள், குகைக் கோயில்கள் என்பன முக்கியம் வாய்ந்தவை.

மௌரியர் காலத்தையடுத்துக் குப்தர் காலம் சிறப்பிடம் பெறுகின்றது. குப்தர் காலத்தில் இந்துமதம் மறுமலர்ச்சி அடையத் தொடங்கியது. கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இலக்கியக் கலை, நாடகக் கலை என்பனவும் வளர்ச்சி பெறலாயின.

குப்தர் காலத்தில் இந்துமதம் படிப்படியாக, சமண, பௌத்த மதங்களை எதிர்த்து வளலராயிற்று. பௌத்த சமயம் துறவறத்தை வலியுறுத்தியது. இரண்டு சமயங்களும் அகிம்சா தத்துவத்தை முன்னெடுத்துச் சென்றன. சமண, பௌத்த மதங்கள் யாத்திரைக்கும் பெருவிழாக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தன. இந்துமதமும் மெல்ல மெல்ல சமண, பௌத்த மதங்களிலிருந்து சிலஅம்சங்களை உள்வாங்கித் தன்னைப் புதுப்பித்துக் கொண்டது. மேலும் இந்துக்கள் தங்களிடையேயிருந்த குறைபாடுகளைக் களைந்து அகிம்சை, அன்பு, கருணை, பொறுமை, தயை, உயிர்நேயம் என்பவற்றைப் பேணத் தொடங்கினர். இந்துசமய அரசர்களும் சமண, பௌத்த மதங்களை ஆதரித்தனர். இதனாற் காலப்போக்கில் சமண பௌத்த மதங்களை ஏற்றவர்களும் இந்துமதத்தை மீண்டும் தழுவிக்கொள்ளத் தொடங்கினர். வேதகால வேள்வி யாகம் என்பவற்றுடன் பக்தி இயக்கமும் இணைந்து கொண்டது. இந்துக்களிடையே பல்வேறுவகைப்பட்ட பிரிவினர் இருந்தனர். அதாவது மகேஸ்வரனை வணங்கியவரும், விஷ்ணுவை வணங்கியவரும், சூரியனை வணங்கியவர்களும் எனப்பலரும் காணப்பட்டனர்.

இதிகாச புராணங்களின் செல்வாக்கு குப்தர் காலத்தில் மிகுந்திருந்தது. அசுவமேதயாகம் முதலியன செய்யப்பட்டன. சிவசின்னங்களைச் சைவர்கள் தரித்தனர். அதே நேரத்தில் வாகட மன்னனாகிய உருத்திரசேனன் வைணவ மதத்தை ஆதரித்தான். இக் காலத்தில் தான் முதல் மூன்று ஆழ்வார்களும் தென்னகத்தில் வாழ்ந்தனர். வராக அவதாரமும், கிருஷ்ண அவதாரமும் அக்காலக் கலை வளர்ச்சிக்கும் சிற்பவளர்ச்சிக்கும் துணை புரிந்தன. இராமன் பற்றி அவ்வளவாக அக்கால மக்கள் அறிந்திருக்கவில்லை. சிவபிரான் மனிதவடிவில் படைக்கப்பட்டார். குசாணர்கள் வெளியிட்ட நாணயங்களில் சிவன் மனிதவடிவில் காணப்படுகின்றார். சில இடங்களில் லிங்க வடிவிலும் வேறு சில இடங்களில் ஒரு முகத்துடனும் நான்கு முகங்களுடனும் சிவன் அமைக்கப்பட்டார்.

பாசுபதமதம் சிலராற் பின்பற்றப்பட்டது. லகுலீசர் என்பவர் கி. பி. 150 இல் இம்மதத்தை உருவாக்கினார். இவர்கள் கடும் நோன்பிகள் மதுராவிலுள்ள (வட மதுரை) சிற்பத்தில் பக்தன் ஒருவன் தன்னுடைய தலையைச் சிவனுக்கு அர்ப்பணம்

செய்கிறான். பிற்காலத்தில் அமைக்கப்பட்ட பல்லவர் சிற்பங்களிலும் இதனைக் காணலாம். இதற்கு 'நவகண்டம்' என்று பெயர்.

மத்திய இந்தியாவிலுள்ள உதயகிரி பூம்ரா ஆகிய இடங்களில் மகிஷாசுர மர்த்தனியின் சிற்பங்கள் உண்டு. மக்கள் வழிபாட்டின் அம்சங்களாகிய இயக்கர் நாகர் வடிவங்களும் யாத்திரைகளும் முக்கிய இடம் பெற்றன. வைதிக மதத்தவர்கள் பஞ்சயக்ஞங்களைச் செய்ததுடன் முச்சந்தியா வந்தனங்களையும் செய்தனர். இவை தவிர விரதங்களும் நோன்புகளும் குறிப்பிட்ட நாட்களின் போது இடம்பெற்றன.

காஷ்மீர், ஆப்கானிஸ்தான், பஞ்சாப் ஆகிய இடங்களில் புத்தசமயம் நன்கு வேரூன்றி இருந்தது. இம்மத தத்துவங்கள் சாரணாத் பகாப்பூர், அஜந்தா நாகார்ஜூனிகொண்டா, காஞ்சி நாளந்தா ஆகிய இடங்களிலும் செல்வாக்குப் பெற்றன. மதுராவிலும், புத்தகாயாவிலும் புத்தசமயம் செல்வாக்குச் செலுத்தியது. காஞ்சிபுரத்தில் தத்துவ சாஸ்திரியாகிய திக்நாகர் வாழ்ந்தார். நாளந்தாவில் ஒரு குரு மடம் அமைக்கப்பட்டது.

குப்தர் காலக் கலை வடிவங்களாகிய கட்டிடங்கள், சிற்பங்கள் என்பன காலத்தினாலும், ஹூணர், முஸ்லீம்கள் ஆகியோரது படையெடுப்புகளாலும் பெரிதும் அழிந்துவிட்டன. பெரும்பாலான கட்டிடங்கள் வண்ணம் தீட்டப்பட்ட மரப்பலகைகளால் அமைக்கப்பட்டமையும் அழிவுக்கொரு காரணமாகும். இப்பொழுது ஒரு சிலவே எஞ்சியுள்ளன. குப்தர் கால இந்துக் கோயில்களின் முக்கிய சிறப்பியல்புகள் பின்வருமாறு ;

1. சிகரங்கள் இல்லாத தட்டையான கூரைகள், கோயில் முன் சிறிய புதுமுக மண்டபம்.

2. பெரிய சதுரப் போதிகைகளைக் கொண்ட தூண்கள்.

3. கோயில் வாயில்களின் இருபுறமும் ஆற்றுத் தெய்வங்களாகிய கங்கையையும் யமுனையையும் செதுக்குச் சிற்பங்களாக அமைத்தல்.

குப்தர்காலக் கட்டிடங்களை உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் ஆகிய இடங்களிற் காணலாம். பெரும்பாலான கட்டிடங்கள் செங்கற்களால் ஆனவை. கான்பூர் பிரதேசத்திலுள்ள பிற்றக்கோன் எனும் இடத்தில் மிகவும் அழகான செங்கற் கட்டிடம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இக் கோயிலின் கூரை பிரமிட் வடிவத்தை ஒத்தது. சுவர்கள் சுடுமட் சிலைகளைக் கொண்டன. இச்சிலைகள் ஐதீகக் கதைகளையும் சொல்கின்றன.

இக்காலத்தில் அமைக்கப்பட்ட கல்லாலான கோயில்கள் மிகவும் குறைவு. எஞ்சிய கோயில்கள் ஆடம்பரமற்ற தட்டையான கூரைகளை யுடையவை. பத்துச் சதுர அடியுள்ள இக்கோயில்களில் இதை விடச் சிறிய புகுமுக மண்டபம் (Porch) உள்ளது. தியோகார் என்ற இடத்தில் தசாவதாரக் கோயில் உள்ளது, இக் கோயிலில் 40 அடி உயரமுள்ள சிகரம் காணப்படுகின்றது. இது திறந்த வெளியில் உயரமான பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் நுழைவாயிலின் இருபுறத்திலும் கங்கையும் யமுனையும் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இது குப்தர் காலத்துக் கலை அம்சங்களுள் ஒன்றாகும். இக்கோயில் அமைப்பு மிகவும் அற்புதமானது. தூபி ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட இந்து சமயக் கோயில் இது என்பர். இங்கே உள்ள படல் (Panel) ஒன்றில் மகாயோகி வடிவில் சிவன்காணப்படுகின்றார். இவருக்கு நாலு கைகள் காணப்படுகின்றன. யோகி ஒருவருடன் இவர் உரையாடுகிறார். இவருடைய தலைக்கு மேல் விண்ணிற் பறக்கும் உருவங்கள் காணப்படுகின்றன. பிறிதொரு படலில் திருமாலின் அனந்த சயனம் காணப்படுகின்றது. அதற்குமேல் தாமரைமீது இந்திரன், சிவன், பிரமன், பார்வதி ஆகியோர் இருக்கும் காட்சியுள்ளது. இவை அமைதியும் கனிவும் கொண்டனவாகக் காட்சியளிக்கின்றன:

குவாலியர், காஞ்சிப் பிரதேசங்களில் இந்துச் சிற்பிகள் புராணக் காட்சிகளை விளக்கும் அழகிய சிற்பங்களை வடித்துள்ளனர். குவாலியரிலுள்ள 'கதிரவன்' சிற்பம் எழில் மிக்கது. அருள் ததும்பும் தோற்றமுடையது. குவாலியருக்கண்மையில் உள்ள ''பாவயா'' என்னுமிடத்திற் கண்டெடுக்கப்பட்ட சிற்பமொன்றில் நடனமாதும். இசைவல்லுனன் ஒருவனும் காணப்படுகின்றனர். இது புடைப்புச் சிற்பமாகும்

காஞ்சியில் போதிசத்துவர் ஒருவரின் உடற்குறை கண்டெடுக்கப்பட்டது. இதுவும் மிக அழகாகச் செதுக்கப்பட்ட சிற்பமாகும்.

பீஸா எனும் இடத்திற்கு அண்மையில் உதயகிரியில் உள்ள குகைவாயிலில் திருமாலின் வராக அவதாரம் புடைப்புச் சிற்பமாகவுள்ளது. விஷ்ணு பன்றிவடிவெடுத்துப் புவி மடந்தையை மீட்கும் இக்காட்சி குப்தர் காலச் சிற்பங்களுள் அற்புதமானதென்பர்.

செசார்லாவில் (Chezarla) அமைக்கப்பட்ட கபோதீஸ்வரர் ஆலயம் மிகப்பழைமை வாய்ந்த இந்துக் கோயில் ஆகும். இதனுடைய அமைப்பும் அரைவட்டவடிவமான பௌத்த சேதியத்தை ஒத்துள்ளது.

புத்த சமயக் கோயில்களுள் ராஜகிரியில் உள்ள தூபியும். சாரணாத்திலுள்ள தூபியும் மிகவும்சிறந்தவை. இவற்றுள் சாரணாத்தில் உள்ள தூபி 128 அடி உயரத்தைக் கொண்டது. இத்தூபியின் நாலு முக்கியமான இடங்களில் நாற்புறத்திலும் புத்தருடைய விக்கிரகத்தை வைக்கும் மாடக்குழிகள் காணப்படுகின்றன. இக்கோயிலின் சுருள் வடிவமான செதுக்குச் சிற்பங்கள் சிற்பக்கலைஞர்களால் புகழப்படுகின்றன.

குசாணர் காலத்தில் வடமதுரையில் தோன்றிய புத்தர் உருவம் குப்தர் காலத்தில் உச்சநிலையை எய்தியது. சாரணாத்தில் கிடைத்திருந்த கோலத்தில் உள்ள வெண் மணற் கல்லாலான புத்தர் வடிவம் இதற்கு நல்ல உதாரணம் ஆகும். அறவாழியை உருட்டும் இப்புத்தருடைய தலையின் பின்புறம் பரிவட்டம் ஒன்றுள்ளது. தேவர் இருவர் புடை சூழ புத்தமதத்தின் உண்மைப் பொருளை உணர்த்துவார் போல எளிமையாக இன்முகத்துடன் காட்சி தருகிறார். வடமதுரையிற் கிடைத்த நிற்கும் புத்தரும் மாசிலா வடிவமேயாகும். இதில் அணிந்துள்ளஆடையும் பரிவட்டமும் அற்புதமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இக்காலத்தில் உலோகத்தாலாகிய படிமங்களும் வளர்ச்சி பெற்றிருந்தன. சுல்தான் கஞ்சிற் பெறப்பட்ட 4ஆம் நூற்றாண்டுக்குரிய செம்பினால் ஆகிய மாபெரும் புத்தர் சிலை சிறப்புடையது.

இக்காலத்திற் கல்லிலே செதுக்கப்பட்ட சிற்பங்களுட் சிறப்பு வாய்ந்தவை அஜந்தாவில் காணப்படுகின்றன. இங்கேயும் புத்தருடைய சிலைகள் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிற்பங்களை அமைக்கும் போது அவர்கள் மனித உருவத்திற்குரிய தன்மைகளைக் கொடுக்காது தெய்வீகத் தன்மையளித்துள்ளனர்.

குப்தர் காலத்துச் சிற்பக்கலையும், ஓவியக் கலையும் ஆசியாவிலே புகழ் மிக்கவை. இந்த அமைப்பு முறை இந்திய கலாதத்துவத்தின் உயிர்நாடியாகத் திகழ்கின்றன. குடும்பவாழ்வு மாளிகை வாழ்க்கை கேளிக்கைகள், விழாக்கள், ஊர்வலங்கள் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த ஓவியங்களைப் பற்றிக் கூறவந்த அறிஞர் ஒருவர் பின்வருமாறு கூறுவர் நூற்றுக்கணக்கான சுவர்களிலும் தூண்களிலும் மிகச்சிறந்த நாடகக் காட்சியைக் காண முடிகின்றது. அரசர்கள், துறவிகள் கதாநாயகர்கள், ஆடவர், மகளிர் ஆகியோர் இங்கே காட்சி தருகின்றனர். கானகக் காட்சிகளையும், பூஞ்சோலைகளையும், பள்ளத்தாக்குகளையும், நகரங்களையும், மாளிகைகளையும் இங்கே காணமுடிகிறது. வானவர்கள் விண்வெளியிற் காணப்படுகின்றனர். இவைதவிர மிருகங்களும், பறவைகளும், மலர்களும் இக்காட்சிகளுக்கு அழகூட்டு

கின்றன. உலகத்தை, தெய்வீகத் தன்மையுடன், அதே நேரத்தில் யதார்த்தமாக இவை காட்டுகின்றன.

முதலாவது குகையில் உள்ள போதிசத்துவர் பத்மபாணி எனும் ஓவியம் ஆசிய நாட்டு ஓவியங்களுள் அற்புதமானது. புத்தருடைய வாழ்க்கை வரலாற்றையும், ஜாதகக் கதைகளையும் அருமையான ஓவியங்களாகக் கலைஞர்கள் இங்கே தீட்டியுள்ளனர்.

மார்ல்வா என்னுமிடத்தில் உள்ள பாக் குகைகளுள் அஜந்தா ஓவியங்களை ஒத்த ஓவியங்கள் காணப்படுகின்றன. இங்கே கிருஷ்ணர், ராதை சம்பந்தமான ஹல்லிசார நடனம் காணப்படுகின்றது. இலங்கையிலுள்ள சிகிரியா ஓவியங்கள் குப்தர் காலத்திற்கு உரியவை. இவை அஜந்தா ஓவியங்களை ஒத்துள்ளன. தென்னிந்தியாவிலுள்ள சித்தன்னவாசல் ஓவியங்களும் அஜந்தா ஓவியங்களைப் போன்றனவேயாகும்.

பௌத்த சமண மதங்களின் எழுச்சியால் இந்து மதத்தில் ஏற்பட்ட தளர்ச்சி குப்தர்காலத்தில் நீக்கப்படுகிறது. இந்து மதத்தின் செல்வாக்கு கடல்கடந்த நாடுகளுக்கும் சென்றது. மலாயா, சுமாத்திரா, யாவா, கம்போடியா இந்தோனேசியத் தீவுகள் ஆகிய இடங்களுக்கும் இவை சென்றன. ஷியாங்ஹியாங் எனும் சீன யாத்திரிகன் நாளந்தாவில் இருந்த 80 அடி உயரமானவெண்கலச் சிலையை வியந்து போற்றியுள்ளான். இது தவிர டெல்கியில் குதுப்மினாருக்கு அருகில் இரும்பினால் ஆகிய தூணொன்று நிறுவப்பட்டது. இது மிகவும் அற்புதமான தூண். இது குப்தர் காலத்திற்குரியது.

குப்தர் காலத்தில் வெளியிடப்பட்ட பொற்காசுகளும் அந்தக் காலத்துக் கலைச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு குப்தர் காலம் இந்துமத மறுமலர்ச்சி காலமாகவும் இந்தியக் கலையுலகிற் சிறப்புடைய காலமாகவும் விளங்குகிறது.

# யாழ்ப்பாணம் பேராதனைப் பல்கலைக் கழகங்களின் (வெளிவாரி விரிவுரைகள்)

**கலைமாணி** *B. A.*

**வணிகமாணி** *B. Com.*

**விஞ்ஞானமாணி** *B. Sc.* **(புள்ளி விபரவியல்)**

*க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்தவர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சிநெறியை மேற் கொள்ளலாம்.*

*விபரத்தினையும், விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10-00 செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்.*

விபரங்களுக்கு

**உதவிப் பதிவாளர்,**
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
***148/1, ஸ்ரான்லி வீதி,***
***யாழ்ப்பாணம்.***

**வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ்நகரில் இதுவே.**

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.